# செயலாற்றுகை அறிக்கை - 2021

# சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

## பொருளடக்கம்


| | | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|---|
| **01** | | உள்ளடக்கம் | **2** |
| **02** | அத்தியாயம் 01 | தாபன ரீதியான வளமுகத் திரட்டு/ செயற்படுத்துவதன் பொழிப்பு | **3 - 5** |
| **03** | அத்தியாயம் 02 | முன்னற்றமும் தொலைநோக்கும் | **6 - 41** |
| **04** | அத்தியாயம் 03 | ஆண்டின் மொத்த நிதியியல் செயற்திறன் | **42 - 66** |
| **05** | அத்தியாயம் 04 | செயற்திறன் சுட்டி | **67 - 69** |
| **06** | அத்தியாயம் 05 | நிலைபேரான அபிவிருத்தி நோக்கினை (SDG) பூர்த்தி செய்து கொள்ளும் செயற்திறன் | **70 - 73** |
| **07** | அத்தியாயம் 06 | மனித வளத்திரட்டு | **74 – 80** |
| **08** | அத்தியாயம் 07 | ஏற்புடைமை அறிக்கை | **81 – 92** |
| **09** | | அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்குறிய புகைப்படங்கள் | **93** |

## அத்தியாயம் - 01

## தாபன ரீதியான வளமுகத் திரட்டு / செயற்படுத்துவதன் பொழிப்பு

### 1.1 அறிமுகம்

2017 ம் ஆண்டின் 02 ம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் திருத்திய 2013ம் ஆண்டின் 01ம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கிய பணியானது 18 இலட்சம் வறிய குடும்பங்களுக்கு சமுர்த்தி நலனுதவிகளை ஏற்படுத்திக் கொடுத்து சமூக பாதுகாப்பு நிதியத்தின் மூலம் அக்குடும்பங்களின் நாளாந்த முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பங்களின் போது பாதுகாப்பினை வழங்குவதற்குறியதாக கொடுப்பனவுகளை வழங்கி இலங்கையில் வறுமையினை வேரோடு ஒழிப்பதற்காக அக்குடும்பங்களை வழுவூட்டுவதற்காக அவர்களது வாழ்வாதார மேம்பாட்டிற்குறிய வேலைத்திட்டங்கள், மற்றும் 1074 சமுதாய அடிப்படை வங்கிகள் ஊடாக நாடு பூராகவும் உள்ள அந்த வறிய குடும்பங்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்குத் தேவையான பல்வேறு குறுநிதிக் கடன்களை வழங்குவதாகும். இதற்கு மேலதிகமாக வறிய மக்கள் மற்றும் குறைந்த வறுமானம் பெறும் மக்களை ஒன்று திரட்டி சமுதாய அடிப்படை அமைப்பு வலையமைப்புக்களை உருவாக்கி செயற்படுவதுடன் சமூக அபிவிருத்தியின் பொருட்டு பல்வேறு வேலைத்திடங்களை செயற்படுத்தவதனையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 1.2. நோக்கு

”2030ம் ஆண்டாகும் போது வறுமை நிலையற்ற வலுவூட்டப்பட்ட இலங்கையினை உருவாக்குவதற்காக செயற்படும் முன்னோடி நிறுவனம் ஒன்றாக ஆகுதல்"

### 1.3. பணி

வசதி வாய்ப்புகளற்ற நிலைக்குள்ளானதான மக்களை பொருளாதார, சமூக, பௌதீக, உள. சட்ட மற்றும் சுற்றாடல் ரீதியாக வலுவூட்டச் செய்யும் பொருட்டு வினைத்திறன் மிக்கதாகவும் பயனுறுதிவாய்ந்ததுமான வேலைத்திட்டங்களை மக்கள் பங்கேற்பினை பெற்றுக் கொண்டு நிலைபேரான முறைகள் ஊடாக செயற்படுத்துதல்.

### 1.4. செயற்படுத்துகின்ற முக்கியமான முறைகள்

2013ம் ஆண்டின் 01ம இலக்க (வாழ்வின் எழுச்சி) சமுர்த்தி சட்டத்தின் ஒழுங்குகளுக்கு எற்ப திணைக்களமானது கீழுள்ள பிரகாரம் முக்கிய மூன்று முறைகளின் கீழ் செயற்படுகின்றது.

1. உத்தியோகக் கட்டமைப்புடனான திணைக்கள முறை.
2. சமுதாய அடிப்படை வங்கிக் கட்டமைப்பு முறை
3. சமுதாய அடிப்படை அமைப்பு முறை

#### 1.4.1 உத்தியோக கட்டமைப்புடனான திணைக்கள முறை

திணைக்களத்தின் உத்தியோகக் கட்டமைப்பின் அமைப்பானது கீழுள்ள பிரகாரம் உத்தியோக ரீதியான பதவிகளை கொண்டதாகும். பணிப்பாளர் தலைமையதிபதியின் உத்தியோகபூர்வமான தலைமைத்துவத்தின் கீழ் மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள் மூவருடன்17 பிரதான பிரிவுகளின் தலைமையில் செயற்படுகின்றது. நிர்வாகம், தாபனம், விசாரணை, சட்டம், தகவல் தொழில்நுட்பம், ஓய்வூதியம், மனித வள அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு நலன்புரியும், வாழ்வாதார அபிவிருத்தி, சமூக அபிவிருத்தியும், சுற்றாடலும், சமுதாய அடிப்படை அமைப்பு, தொழில் முயற்சி அபிவிருத்தி, திட்டமிடலும் நெறிப்படுத்தலும், குறுநிதி (வங்கி), ஊடகம், நிதி மற்றும் உள்ளகக் கணக்காய்வு ஆகிய பிரிவுப் பொறுப்பு தலைமைகள், தலைமைக்காரியாலயத்திலும் 25 மாவட்டங்களிலும் உள்ளடங்குகின்ற விதத்தில் தனது பிரிவுகளின் செயற்பாடுகள் அமுல்படுத்தப்படுகின்றது.

மாவட்ட மட்டத்தில் மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள் / மாவட்டச் செயலாளர்களின் நெறிப்படுத்தலின் கீழ் உள்ள மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள் மற்றும் அப்பணியாளர்கள் மற்றும் அப்பணிக்கழு மூலம் மாவட்ட, பிரதேச செயலகப்பிரிவுகள், வலயங்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டடத்தில் (வாழ்வின் எழுச்சி சமுர்த்தி சட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்குறிய கடமைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது, சமுதாய அடிப்படை வங்கி நடவடிக்கைகள் சமுதாய அடிப்படை அமைப்புக்களை கட்டியெழுப்புதல், மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்களை கிராமிய மட்டத்தில் செயற்படுவது பிரதேச செயலாளர்கள் தலைமையில் சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட ஏனைய சகல அலுவலக மற்றும் கள உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. மொத்த ஊழியர்களின் எண்ணிக்கையானது 26,375 ஆகும்.

### 1.4.2. சமுதாய அடிப்படை வங்கிக் கட்டமைப்பு முறை

இப்பிரிவின் பணிப்பெறுப்பானது, தலைமைக்காரியாலயத்தின் வங்கி நிதியப் பணியாளரின் கீழ் நிர்வகிக்கப்படும் பணியாளர்கள் ஊடாகவும் நாடுபூராகவும் உள்ள பிரதேச செயலகங்கள் 331 இற்குறிய தலைமையகங்கள் மற்றும் சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம், வலயம் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகள் மட்டத்தில் செயற்படுகின்ற 1074 வங்கிகளுக்குரிய சகல பணியாளர் மூலமாக இவ்வங்கி வலையமைப்பினை செயற்படுத்துகின்றது. அந்த வலையமைப்பின் ஊடாக சமுர்த்தி நிவாரணம் வழங்குதல், பயனாளிகளின் கட்டாய சேமிப்பு வைப்புக்களை பராமரித்துச் செல்லல்,பயனாளிகளின் வைப்புக்களை பராமரித்துச் செல்ல மற்றும் சேமிப்பு சிருத்திகள். பயனாளிகளுக்கும் குறைந்த வருமானம் பெறுவோருக்கும் குறுநிதிக் கடன்களை வழங்குதல் சேமிப்பு நிதியங்களை கூடியளவு நலன்கள் கிடைக்கப்பெறும் நிதிக் கூற்றுக்களின் முதலீடு செய்தல் மற்றும் பிற சமூக நலன்புரி நடவடிக்கைகளை செயற்படுத்துகின்றது.

2021 ம் ஆண்டிற்குள், வாழ்வாதார நடவடிக்கைகளின் பொருட்டு கடன் வசதிகள் தேவைப்படுகின்ற கிராமிய மக்களுக்கு 19 கடன் திட்டங்களின் ஊடாக வழங்கப்பட்டிருந்த மொத்தக் கடன்களின் பெறுமதியானது ரூபா மில்லியன் 37047 ஆகும். அதற்குறிய கடன்களின் எண்ணிக்கையானது 394546.41 ஆகும். இதற்குறிய திரட்டிய கடன்களின் எண்ணிக்கையானது 11,669,343 ஆகும். மொத்த வங்கிக் கணக்குகளின் எண்ணிக்கையானது 85,3811,91 ஆகும். மொத்த வைப்புத் தொகையானது ரூபா மில்லியன் 82.84 ஆகும் மேலும் இப்பிரிவின் சகல நடவடிக்கைகளில் புதிய தகவல் தொழில்நுட்ப முறையூடாக நடைமுறைப்படுத்தி மக்களுக்கு வினைத்திறன் மிக்கதும் தரம் வாய்ந்ததுமான சேவையொன்றினை வழங்க உத்தேசித்துள்ளது.

### 1.4.3. சமுதாய அடிப்படை அமைப்பு முறை

2017 ம் ஆண்டின் 02ம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் திருந்திய 2013ம் ஆண்டின் 01ம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் பிரகாரம் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் சமுர்த்தி மாவட்ட அமைப்பினை ஆரம்பிக்கும் பொருட்டு தேவையான கட்டளைகள் மற்றும் அமைப்பு விதிகள் (சமுர்த்தி சட்டத்தின் 42வது பிரிவு) உள்ளடங்களாக 2017ம் ஆண்டின் மார்ச் 07ம் திகதியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2009/08 என்ற இலக்கத்தினையுடைய அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது. அதன் பிரகாரம் சமுர்த்தி சட்டத்தின் அடிப்படை குறிக்கோளான வறுமையினை ஒழித்தல், மற்றும் சமூக சமத்துவத்தினை நிறைவேற்றும் பொருட்டு ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவும் உள்ளடங்குகின்ற பிரகாரம் தன்னார்வத்துடன் கூடுகின்ற சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களை ஆரம்பிப்பதும் (சமுர்த்தி சட்டத்தின் 15வது பிரிவு) சமுர்த்தி மாவட்ட குழுக்களை (சமுர்த்தி சட்டத்தின் 19 பிரிவு) ஆரம்பித்து பலப்படுத்தி, மக்களை வலுவூட்டி, அவர்களை பொருளாதார, சமூக மற்றும் ஆத்மீக ரீதியாக அபிவிருத்தி செய்து சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வாழ்வாதார வேலைத்திட்டங்களின் பொருட்டு ஈடுபடச் செய்யும் நோக்குடன் 2021 ஆண்டாகுமிடத்து 30,211 சமுதாய அடிப்படை அமைப்புபக்கள் 331 பிரதேச அமைப்புக்கள் மற்றும் 25 மாவட்டக் குழுக்கள் செயற்பட்டு வருகின்றன.

## 1.5 Departmental Organizational Structure



அத்தியாயம் – 02

## முன்னேற்றமும் தொலைநோக்கமும்

### 2.1திணைக்களத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய வேலைத்திட்டங்களின் முன்னேற்றம்.

### 2.1.1 சமூக நலன்புரி வேலைத்திட்டம்

#### 2.1.1.1 அறிமுகம்

வறுமையினை ஒழிக்கும் அடிப்படைக் குறிக்கோளை மையமாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் அரசாங்கத்தின் முக்கியமான நலன்புரிவேலைத்திட்டம் ஒன்றாக 1994ம் ஆண்டுமுதல் இது வரையில் சமுர்த்தி வேலைத்திட்டம் செயற்பட்டு வருகின்றது. இந்த வேலைத்திட்டமானது இலங்கை சமுர்த்தி அதிகார சபை மற்றும் சமுர்த்தி ஆணையாளர் நாயகத்திணைக்களம் என இரு நிறுவனங்களின் கீழ் செயற்பட்டதுடன் நலன்புரி வேலைத்திட்டம் சமுர்த்தி ஆணையாளர் நாயகத்திணைக்களத்தின் கீழ் செயற்பட்டது.

மேலும் 2013ம் ஆண்டின் 01ம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டுள்ள வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம் 2017ம் ஆண்டின் 02ம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் ஊடாக சமுர்த்தி அவிருத்தித் திணைக்களம் என மாற்றமடைந்தது. அதற்கமைய நிவாரண உதவி வேலைத்திட்டங்கள் அத்திணைக்களத்தின் சமூக பாதுகாப்பு மற்றும் நலன்புரி பிரிவின் கீழ் தற்போது செயற்படுகின்றது.

#### 2.1.1.2 நிவாரண உதவி வேலைத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள்

- வறிய மக்களின் போசனைத் தேவைகளை பூர்த்தி செய்வதும் அபிவிருத்தித் தேவையின் பொருட்டு அவர்களை அணிதிரட்டவதும்.
- வீடமைப்பு லொத்தர் நிதியத்தின் பொருட்டு பங்களிப்புச்செய்து கொள்ளல்.
- கட்டாய சேமிப்பின் ஊடாக குறைந்த வருமானம் பெறுபவரை நிதியியல் ரீதியாக பலப்படுத்துதல்.
- சமூக பாதுகாப்பு வேலைத்திட்டத்திற்கு பங்களிப்பினை பெற்றுக் கொண்டு அக்குடும்பங்களின் உத்தேச மற்றும் எதிர்பாராத அனர்த்த நிலைகளின் போது நிதிப் பலத்தினை வழங்குதல்.

#### 2.1.1.3 நிவாரண உதவிகளை வகைப்படுத்துதல்

**புள்ளிவிபர அட்டவணை ( I )**

| குடும்ப அங்கத்தவர்ளின் எண்ணிக்கை | நிவாரண உதவிகளின் பெறுமதி (ரூபா) | நிவாரண உதவிக் கொடுப்பனவு பிரிந்துச் செல்லும் விதம் | | | |
|---|---|---|---|---|---|
| | | கட்டாய சேமிப்பு (ரூபா) | சமூக பாதுகாப்பு (ரூ) | வீடமைப்பு லொத்தர் நிதியம் (ரூபா.) | பயனாளிக்கு செலுத்த வேண்டிய தொகை (ரூபா) |
| 04 அல்லது 04 இலும் கூடியது | 3500/- | 300/- | 100/- | 80/- | 3020/- |
| 03 (மூவருக்கு) | 2500/- | 200/- | 100/- | 80/- | 2120/- |
| 03 (மூவரிலும் குறைந்த) | 1500/- | 100/- | 100/- | 80/- | 1220/- |
| வலுவூட்டப்பட்ட குடும்பங்கள் | 420/- | 240/- | 100/- | 80/- | - |

#### 2.1.1.4 சமுர்த்தி நிவாரணம் உதவிபெறும் குடும்பங்கள்

ஒரு வீட்டிற்குள் வாழ்ந்து வரும் தகப்பன் உட்பட திருமாணமாகாத பிள்ளைகளும் அக்குடும்பத்தில் தங்கி வாழும் முதியோரும் ஏனையோர்களும் ஒரு குடும்பமாக கருதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

**2.1.1.5 சமுர்த்தி நிவாரண உதவி பெறும் குடும்பம் ஒன்றினை தெரிவு செய்யும் போது கவனத்திற்கொள்ளப்படும் பிரதானமான எடுகோள்கள்.**

i. கல்வி

ii சுகாதாரம்

iii குடும்பத்தின் பொருளாதார நிலை

iv சொத்துக்கள்

v வீட்டின் நிலை

vi குடும்பத்தின் சனத்தொகை

**2.1.1.6 நிவாரண உதவிகளை அங்கீகரித்தல்**

பிரிவு மட்டத்தில் பெற்றுக் கொள்ளப்படும் பெயர்ப்பட்டியலை கவனத்திற் கொண்டதன் பின்னர் கிராமியக் குழுவின் சிபாரிசினைப் பெற்று வங்கி வலய முகாமையாளர்களால் உரிய பிரதேச செயலாளர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற பயனாளிகள் பட்டியலை கவனத்திற் கொண்டு விண்ணப்பதாரிக்கு சமுர்த்தி நிவாரண உதவி உரித்தினை வழங்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு ஒப்படைக்கப்படுகின்றது..

**2.1.1.7 மேன்முறையீடுகள் / ஆட்சேபனைகள்**

நிவாரண உதவியைப் பெறுவதற்கு தனக்கு தகுதியிருந்தும் கிடைக்கப்பெறவில்லை என எண்ணுவதாயின் அது தொடர்பிலான மேன்முறையீடுகளை மாவட்டச் செயலாளரருக்கு/ மாவட்ட சமுர்த்தி மேலதிகப் பணிப்பாளரக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இங்கு வழங்கப்படும் தீர்மானங்கள் தொடர்பில் திருப்திப்படாதிருப்பின் தலைமைக் காரியாலயத்தின் சமுர்த்தி பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க முடியும்.

**2.1.1.8 சமுர்த்தி நிவாரண உதவி கிடைக்கப் பெறாத சந்தர்ப்பங்கள்**

I. அரசாங்க அல்லது தனியார் துறையில் நிரந்தரமான தொழிலில் ஈடுபடும் அங்கத்தவர் ஒருவர் குடும்ப அலகில் உள்ளமை.

II. அரசாங்க தொழிலில் ஈடுபடுகின்றமை காரணமாக ஓய்வூதியத்திற்கு உரித்துடைய ஒருவர் குடும்ப அலகில் உள்ளமை.

III. வருமானமீட்டல் செயற்பாடு ஒன்றின் ஊடாக உயர்ந்த வருமானத்தினை உழைக்கும் வலுவூட்டப்பட்டுள்ள குடும்பங்கள்.

IV. தொழிலின் நிமித்தம் வெளிநாடு சென்று 06 மாதங்கள் தாண்டியுள்ள ஒருவரையுடைய குடும்பங்கள்.

V. கிராமியக் குழுவினால் இனங்காணப்படுகின்ற போற்றத்தக்க நாளாந்த வருமானத்தைப் பெறும் பயிற்றப்பட்ட தொழிலாளர்களையுடைய குடும்பங்கள்.

**2.1.1.9 சமயத்தலைவர்களுக்கு நிவாரணத்தினை வழங்குதல்**

சமயத் தலைவர்களுக்கான நிவாரணமானது தனிநபர்களுக்கான நிவாரணமானது தனிநபர்களுக்கான ரூபா 1500/= என்ற நிவாரணப் பெறமதியாகும். 18 வயதிலும் குறைந்த சமயத்தலைவர்களுக்கான நிவாரணத் தொகையானது அந்த சமயத்தின் சட்ட பூர்வமான பொறுப்பாளிகளின் கணக்குகளில் வரவு வைக்கப்படும். இந்த சமயத்தலைவர்கள் அரசாங்கத்தில் பதிவு செய்யப்படல் வேண்டும்.

**2.1.1.10 முதியோர் இல்லங்கள் / சிறுவர் இல்லங்கள் / மாற்றுத் திறனாளி இல்லங்கள்**

நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்கள்திலும் சமூக சேவைகள் திணைக்களத்திலும் பதிவினைப் பெற்றுள்ள போதுமானளவு வருமானங்கள் கிடைக்கப் பெறாதவர்களின் தனிநபர் எனக் கருதி ரூபா 1500/- ற்கான உதவிகள், குறித்த சிறார்கள் இல்லத்திற்கும் பொறுப்பான பராமரிப்பாளரின் பெயரில் வழங்கப்படுவதுடன் 18 வயதிற்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு தனித்தனியாக வழங்கப்படுகின்றது..

### 2.1.1.11 நிவாரணத் தொகையினை பயனாளிக்கு விடுவித்தல்

நிவாரணக் கொடுப்பனவினை செலுத்தும் பொருட்டு தேவையான நிதியமானது பயனாளியின் முகாமைத்தவ மொடியூலின் ஊடாக சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மட்டத்தில் வழங்கப்படும் உச்சபட்ச மாதாந்த அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு தலைமைக் காரியாலயத்தினால் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் உத்தியோகபூர்வ நடைமுறைக் கணக்கிற்கு இலத்திரணியல் ரீதியாக பணம் அனுப்பப்பட்டதன் பின்னர் பயனாளிகளின் சேமிப்புக் கணக்குகள் ஊடாக பணம் செலுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுகின்றது.

### 2.1.1.12. கடந்த 05 வருடங்களுக்குள் சமுர்த்தி நிவாரணம் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையும் செலவுகளும் (2017 - 2021)

**புள்ளிவிபர அட்டவணை - (II)**

| ஆண்டு | பயனாளிகளின் எண்ணிக்கை | செலவு(ரூ). |
|---|---|---|
| 2017 | 1,388,242 | 39,707,051,488.00 |
| 2018 | 1,384,021 | 39,257,773,920.00 |
| 2019 | 1,800,182 | 44,676,637,360.00 |
| 2020 | 1,770,086 | 52,471,893,980.00 |
| 2021 | 1,760,485 | 51,550,652,440.00 |

### 2.1.1.13. 2021 ம் ஆண்டின் சமுர்த்திப் பயனாளிகளின் எண்ணிக்கை மாவட்டங்களுக்கு அமைய

**புள்ளிவிபர அட்டவணை-(III)**

| மாவட்டம் | ரூபா 420/= | ரூபா 1500/= | ரூபா 2500/= | ரூபா 3500/= | மொத்தப் பயனரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | 544 | 25,620 | 10,150 | 16,906 | 53,220 |
| கம்பஹா | 3,338 | 53,678 | 27,644 | 51,157 | 135,817 |
| களுத்துறை | 3,453 | 31,645 | 12,922 | 22,433 | 70,453 |
| கண்டி | 2,335 | 44,710 | 17,197 | 34,243 | 98,485 |
| மாத்தளை | 1,404 | 23,090 | 9,784 | 17,814 | 52,092 |
| நுவரெலியா | 4,333 | 24,259 | 10,932 | 13,789 | 53,313 |
| காலி | 4,275 | 28,899 | 15,377 | 31,614 | 80,165 |
| மாத்தறை | 1,225 | 29,049 | 13,241 | 25,818 | 69,333 |
| ஹம்பாந்தோட்டை | 1,487 | 20,919 | 13,414 | 28,705 | 64,525 |
| யாழ்ப்பாணம் | 2 | 24,829 | 14,185 | 39,428 | 78,444 |
| மன்னார் | - | 6,821 | 4,244 | 11,640 | 22,705 |
| வுவுனியா | 299 | 7,276 | 4,693 | 11,251 | 23,519 |
| முல்லைத்தீவு | 15 | 7,800 | 4,924 | 11,521 | 24,260 |
| கிளிநொச்சி | 22 | 7,609 | 4,254 | 11,866 | 23,751 |
| மட்டக்களப்பு | 9,258 | 33,081 | 18,452 | 38,435 | 99,226 |
| அம்பாறை | 7,218 | 32,079 | 15,619 | 30,036 | 84,952 |
| திருகோணமலை | 1,081 | 21,805 | 12,133 | 25,406 | 60,425 |
| குருணாகலை | 5,523 | 64,540 | 32,306 | 66,273 | 168,642 |
| புத்தளம் | 585 | 28,127 | 11,805 | 23,269 | 63,786 |
| அனுராதபுரம் | 1,750 | 33,669 | 13,939 | 22,443 | 71,801 |
| பொலன்னறுவை | 1,900 | 10,977 | 8,490 | 14,603 | 35,970 |
| பதுளை | 1,814 | 31,707 | 14,952 | 26,933 | 75,406 |
| மொணராகலை | 3,893 | 20,751 | 12,166 | 20,421 | 57,231 |
| இரத்தினபுரி | 5,100 | 35,277 | 26,524 | 55,706 | 122,607 |
| கேகாலை | 4,484 | 24,440 | 13,548 | 27,885 | 70,357 |
| மொத்தம் | **65,338** | **672,657** | **342,895** | **679,595** | **1,760,485** |

## 2.1.2 சமுர்த்தி சமூக பாதுகாப்பு வேலைத்திட்டம்

### 2.1.2.1 அறிமுகம்

காணிப்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு இலக்கம் 8 ஐ உடைய நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் மூலம் 1997.01.01ம் திகதியிலிருந்து அமுலிலுள்ள பிரகாரம் சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் கீழ் சமுர்த்தி சமூக பாததுகாப்பு நிதியம் என்ற பெயரில் நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தி வந்தது. சமூக பாதுகாப்பு நிதியமானது இலாபமற்றது என்ற அடிப்படையில் நலன்புரி நோக்கங்களை முன்வைத்து உருவாக்கப்பட்டது. சமுர்த்தி பயனாளிகள் தன்னார்வமாக மாதாந்த பங்களிப்பு, வங்கி முதலீடுகள் மற்றும் சமூக பாதுகாப்பு நிதியத்தின் மூலம் நிர்வகிக்கப்படுகின்ற நிலாவெளி சமுர்த்தி பயிறசி நிலையம் போன்ற நிறுவனங்கள் ஊடாக கிடைக்கப்பெறும் வருமானங்களினூடாக சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியம் கட்டியெழுப்பப்பட்டுள்ளதுடன் அந் நிதியத்தினைப் பயன்படுத்தி சமூக பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

2013ம் ஆண்டின் 01ம் இலக்க வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம் ஆரம்பிக்கப்படும் போது சமுர்த்தி ஆனையாளர் நாயகத் திணைக்களத்தின் செயற்பாடுகளை உள்ள பிரகாரமே நடைமுறைப்படுத்தும் மூகமாக இதனோடு இணைக்கப்பட்டது. அதன் பிரகாரம் வாழ்வின் எழுச்சி அபவிருத்தி திணைக்களத்தின் கீழ் வாழ்வின் எழுச்சி சமூக பாதுகாப்பு நிதியமாக இது செயற்பட்டதுடன் 2017ம் ஆண்டின் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் என்ற பெயரில் மாற்றப்பட்டதனையிட்டு சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியம் என்ற பெயரில் செயற்படுகின்றது.

சமுர்த்தி பயனாளிகளால் சுயவிருத்தின் பிரகாரம் வழங்கப்படும் மாதாந்த பங்களிப்புத் தொகை மற்றும் அப்பங்களிப்புத் தொகையிலிருந்து பயனாளிக் கொடுப்பனவுகளை மேற்கொண்டதன் பின்னர் நிலுவையாகும் தொகை அரச வங்கியில் முதலிடவது மற்றும் அதன்மூலம் ஈட்டிக்கொள்ளப்பட்ட வட்டி வருமானங்கள் ஊடாக இந்த நிதியம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அவ்வாறு கட்டியழெுப்பப்பட்ட நிதியங்களிலிருந்து சமுர்த்திப் பயனாளிகள், குறைந்த வருமானம் பெறுவோர் அநாதரவற்ற நிலைக்குள்ளாகியுள்ள நபர்கள், குழுக்கள், மற்றும் , இரட்டைக் குழந்தைப் பேறு, திருமணங்கள், வைத்தியசாலையில் அனுமதித்தல், இறப்புக்கள் மற்றும் சிப்தொர புலமைப்பரிசில் ஆகிய உத்தேச மற்றும் எதிர்பாராத சம்பவங்களின் பொருட்டு காப்பீட்டு முறையொன்றாக நலனுதவி வழங்கப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக சமுர்த்தி சமூக பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் சமூகத்தில் அநாதாரவற்ற நிலைக்குள்ளாகியுள்ள நபர்கள், குழுக்கள், மற்றும் நிறுவனங்களுக்கு நிதி மற்றும் பண்டங்கள் என்ற வகையில் உதவிகள் வழங்கப்படுகின்றது.

அதே போன்று நிதியத்திற்குச் சொந்தமான நிரந்தரமான சொத்துக்களை நிலாவெளி சமுர்த்தி பயிற்சி நிலையம், உள்ளக மற்றும் பிற நிறுவனங்களுக்கு தங்குமிட வசதிகள், பயிற்சிகள், விரிவுரைகள் பட்டறைகள் போன்றவற்றின் பொருட்டு வழங்கப்படுகின்றது.

### 2.1.2.2 நிலயத்தின் மூலம் தற்போது நிறைவேற்றப்படுகின்ற பணிகள்

- சமுர்த்திப் பயனாளிக் குடும்பங்களில் முதலாவது. இரண்டாவது மற்றும் மூன்றாவது பிள்ளைப் பேற்றின் பொருட்டு ரூபா 10,000/= வீதம் கொடுப்பனவினை மேற்கொள்ளல்
- மேற்படி ரூ. 10,000/= இற்கு மேலதிகமாக இரட்டைக் குழந்தைப் பேற்றின் பொருட்டு கீழுள்ள பிரகாரம் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்.
- இரட்டைக் குழந்தையாயின் மாதாந்தம் ரூபா 5,000/= வீதம் ஒரு வருடத்திற்கு
- மூன்று பிள்ளைகளுக்கு மேற்பட்ட சந்தர்ப்பமாயின் மாதாந்தம் ரூபா. 10,000/= வீதம் ஒரு வருடத்திற்கு
- சமுர்த்திப் பயனாளிக் குடும்பங்களின் பயனாளியினதும் பிள்ளைகளினதும் 02 திருமணங்களுக்கு ரூபா 10,000/= ஐ செலுத்துதல்.
- சமுர்த்திப் பயனாளி குடும்பங்களின் பயனாளி அல்லது வாழ்க்கைத் துணை மற்றும் குடும்பத்தின் திருமணமாகாத பிள்ளைகள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில், நாளொன்றுக்கு ரூபா 350/= வீதம் ஒரு வருடத்தில் 30 நாட்களுக்கு ரூபா 10,500/= என நலனுதவியினைச் செலுத்துதல்.
- சமுர்த்திப் பயனாளிக் குடும்பங்களில் இறப்பு நிகழ்ச்சியொன்றின் பொருட்டு ரூபா 20000/= ஐ செலுத்துதல்.
- நாடுபூராகவும் உள்ள சமுர்த்திப் பயனாளிக் குடும்பங்களின் க.பொ.த (உ/தரம்) கல்வி கற்கும் சகல மாணவ மாணவிகளுக்கும் மாதம் ஒன்றுக்கு ரூபா 1500/= வீதம் இரு வருட கற்கைக் காலத்திற்கு புலமைப்பரிசில் பணம் வழங்கப்படுகின்றது. ஏதேனும் ஒரு

காரணத்தினடிப்படையில் பரீட்சையினை நடாத்தியுள்ள குறித்த தினமானது பிற்போட வேண்டியேற்பட்டால் அவ்வாறு பரீட்சை நடைபெறும் மாதம் வரை கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

- சமுர்த்தி சமூக பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்பு சபை மூலம் அங்கீகரிக்கப்படுகின்ற ஏனைய குறைந்த வருமானம் பெறுவோரை இலக்காகக் கொண்ட சமூக அபிவிருத்திக் கருத்திட்டங்களும் சந்தர்ப்பத்திற்கேற்ப நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

### 2.1.2.3 நிலாவெளி சமுர்த்தி நிலையம்

இப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி வேலைத்திட்டங்கள் நடாத்துவது மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு தங்குமிட வசதிகளை வழங்கும் நடவடிக்கைககளும் மேற்கொள்ளப்படுகின்ற நிலையத்திற்குள் விரிவுரை மண்டபங்கள் மற்றும் விஷேட வசதிகளும் வழங்கப்படுகின்றன. இப்பயிற்சி நிலையத்தில் 115 பேருக்கு விடுதிகளில் தங்குவதற்கான வசதிகளும் உள்ளன. பயிற்சி வேலைத்திட்டத்தினை செயற்படுத்தும் பொருட்டு 05 விரிவுரை மண்டபங்களைக் கொண்ட பயிற்சி நிலையத்தில் ஒரே தடவையில் 250 பயிலுனளர்களுக்கு பயிற்சியினை வழங்க முடியும்.

### 2.1.2.4 பொத்துவில சுற்றுலா விடுதி

குருணாகல் மாவட்டத்தின் பொல்பித்தி கம பிரதேச செயலகப் பிரிவுக்கு சொந்தமான பொத்துவில கிராமம் சார்ந்தமான மிக அழகான சூழலில் சமூக பாததுகாப்பு நிதியம் பயன்படுத்தப்பட்டு அன்றிருந்த சமுர்த்தி ஆனையாளர் நிர்வாகத் திணைக்களத்தின் மூலர் இந்த விடுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்த சுற்றுலா விடதி மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு வேலைத்திட்டத்திற்கு ரூபா 3000.00 மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

### 2.1.2.5 பெற்றுக் கொள்ளப்பட்ட சமூக பொருளாதார, பெறுபேறுகள்

- பயனாளிகளின் வாழ்க்கைத்தரம் கீழ் மட்டத்திற்கு வரும் அச்சந்தர்ப்பங்களில் நிதி மற்றும் பிரிவு உதவிகளை வழங்குவதன் ஊடாக அவர்களது குடும்பங்களை பாதுகாத்தல்
- க.பொ.த (சா.தரம்) தேறிய உ.பொ.த (தரம்) கற்பதற்கு வாய்ப்புக் கிடைக்கும் சமுர்த்திப் பயனாளி மாணவர்களின் இரண்டாம் தரக் கல்வியினை இடைவிடாமல் தடுப்பதற்காக வெற்றிகரமான உயர்கல்வியினைப் பெறும் பொருட்டு ஊக்குவித்தல்.
- பிறப்பு மற்றும் இரட்டைக் குழந்தைப் பேறுகள் மற்றும் நோய்களின் பொருட்டு நிதியியல் ரீதியான நன்மைகளை வழங்குவதன் மூலம் போசனை மட்டத்தினை உயர்த்தி ஆரோக்கியமுள்ள சமூக பாதுகாப்பு சூழல் ஒன்றின் பொருட்டு பங்களிப்புச் செய்தல்.
- சமுர்த்தி நிவாரணம் பெறுவோருக்கு முக்கியமான சமூக பாதுகாப்பு வலையமைப்பிற்காக பங்களிப்புச் செய்வதன் ஊடாக சனத்தொகை வறுமைக் சுட்டிலை பின்னடையச் செய்ய காரணமாகியுள்ளமை.
- அதிக வட்டி வீதத்தின் கீழ் முதலீடு செய்வதனூடாக நிதியத்தின் நிதி நிலையினை போற்றக் கூடிய மட்டத்தில் பேணிக்கொள்ளல்.

## புள்ளிவிபர அட்டவணை - (IV)

### சமூக பாதுகாப்பு நன்மைகளை செலுத்துதல்

### 2021.01.01 முதல் 2021.12.31 திகதி வரை

| தொ. இல | மாவட்ட செயலகம் | பிறப்பு | | திருமணம் | | நோய் | | இறப்பு | | புலமைப் பரிசு | | இரட்டைக் குழந்தை பிறப்பு | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அளவு | தொகை ரு | அளவு | தொகை ரு | அளவு | தொகை ரு | அளவு | தொகை ரு | அளவு | தொகை ரு | அளவு | தொகை ரு | அளவு | தொகை ரு |
| 1 | கொழும்பு | 150 | 1,500,000.00 | 611 | 6,110,000.00 | 1,422 | 5,956,900.00 | 1,409 | 28,105,000.00 | 6,913 | 10,369,500.00 | 11 | 55,000.00 | 10,516 | 52,096,400.00 |
| 2 | கம்பஹா | 642 | 6,417,500.00 | 1,930 | 19,297,500.00 | 7,114 | 29,618,000.00 | 2,828 | 56,555,000.00 | 27,307 | 40,960,500.00 | 32 | 180,000.00 | 39,853 | 153,028,500.00 |
| 3 | களுத்துறை | 203 | 2,030,000.00 | 1,070 | 10,700,000.00 | 3,117 | 13,811,700.00 | 2,259 | 45,180,000.00 | 12,153 | 18,229,500.00 | 48 | 240,000.00 | 18,850 | 90,191,200.00 |
| 4 | கண்டி | 456 | 4,560,000.00 | 1,427 | 14,270,000.00 | 2,781 | 11,361,550.00 | 2,354 | 47,080,000.00 | 17,097 | 25,645,500.00 | 63 | 370,000.00 | 24,178 | 103,287,050.00 |
| 5 | மாத்தளை | 494 | 4,940,000.00 | 800 | 8,000,000.00 | 2,509 | 10,231,100.00 | 1,265 | 25,295,000.00 | 12,531 | 18,796,500.00 | 42 | 210,000.00 | 17,641 | 67,472,600.00 |
| 6 | நுவரெலியா | 370 | 3,700,000.00 | 612 | 6,120,000.00 | 1,163 | 5,054,000.00 | 1,247 | 24,940,000.00 | 14,483 | 21,724,500.00 | 17 | 85,000.00 | 17,892 | 61,623,500.00 |
| 7 | காலி | 360 | 3,600,000.00 | 1,331 | 13,310,000.00 | 3,407 | 14,089,500.00 | 2,077 | 41,540,000.00 | 11,132 | 16,698,000.00 | 39 | 195,000.00 | 18,346 | 89,432,500.00 |
| 8 | மாத்தறை | 534 | 5,340,000.00 | 1,287 | 12,870,000.00 | 3,370 | 13,626,550.00 | 1,864 | 37,280,000.00 | 10,108 | 15,162,000.00 | 29 | 145,000.00 | 17,192 | 84,423,550.00 |
| 9 | ஹம்பாந்தோட்டை | 752 | 7,517,500.00 | 1,187 | 11,870,000.00 | 2,821 | 11,522,650.00 | 1,098 | 21,945,000.00 | 11,788 | 17,682,000.00 | 125 | 675,000.00 | 17,771 | 71,212,150.00 |
| 10 | யாழ்ப்பாணம் | 1,123 | 11,220,000.00 | 1,614 | 16,140,000.00 | 3,506 | 12,932,500.00 | 1,530 | 30,600,000.00 | 18,290 | 27,435,000.00 | 74 | 395,000.00 | 26,137 | 98,722,500.00 |
| 11 | மன்னார் | 387 | 3,870,000.00 | 575 | 5,750,000.00 | 928 | 3,370,400.00 | 297 | 5,940,000.00 | 3,481 | 5,228,500.00 | 28 | 140,000.00 | 5,696 | 24,298,900.00 |
| 12 | வவுனியா | 281 | 2,810,000.00 | 416 | 4,160,000.00 | 545 | 2,675,400.00 | 284 | 5,680,000.00 | 4,713 | 7,069,500.00 | 50 | 250,000.00 | 6,289 | 22,644,900.00 |
| 13 | முல்லைத்தீவு | 440 | 4,400,000.00 | 522 | 5,220,000.00 | 3,598 | 3,190,150.00 | 280 | 5,600,000.00 | 7,492 | 11,238,000.00 | 36 | 180,000.00 | 12,368 | 29,828,150.00 |
| 14 | கிளிநொச்சி | 373 | 3,730,000.00 | 452 | 4,520,000.00 | 1,455 | 6,874,000.00 | 333 | 6,660,000.00 | 7,806 | 11,709,000.00 | 71 | 355,000.00 | 10,490 | 33,848,000.00 |
| 15 | மட்டக்களப்பு | 1,175 | 11,750,000.00 | 2,641 | 26,410,000.00 | 5,204 | 19,087,400.00 | 1,745 | 34,900,000.00 | 17,465 | 26,197,500.00 | 125 | 705,000.00 | 28,355 | 119,049,900.00 |
| 16 | அம்பாறை | 1,139 | 11,390,000.00 | 2,584 | 25,840,000.00 | 5,652 | 21,987,250.00 | 1,692 | 33,840,000.00 | 18,370 | 27,555,000.00 | 86 | 450,000.00 | 29,523 | 121,062,250.00 |
| 17 | திருகோணமலை | 1,197 | 11,970,000.00 | 1,453 | 14,530,000.00 | 1,734 | 6,678,350.00 | 979 | 19,580,000.00 | 7,587 | 11,379,000.00 | 130 | 930,000.00 | 13,080 | 65,067,350.00 |
| 18 | குருணாகலை | 977 | 9,770,000.00 | 1,876 | 18,760,000.00 | 3,845 | 16,007,400.00 | 3,322 | 66,440,000.00 | 11,087 | 16,630,500.00 | 100 | 590,000.00 | 21,207 | 128,197,900.00 |
| 19 | புத்தளம் | 711 | 7,110,000.00 | 1,371 | 13,710,000.00 | 2,121 | 9,821,450.00 | 1,682 | 33,640,000.00 | 11,167 | 16,750,500.00 | 84 | 430,000.00 | 17,136 | 81,461,950.00 |
| 20 | அனுராதபுரம் | 580 | 5,800,000.00 | 1,153 | 11,530,000.00 | 2,254 | 10,261,150.00 | 1,519 | 30,380,000.00 | 10,188 | 15,432,000.00 | 95 | 345,000.00 | 15,789 | 73,748,150.00 |
| 21 | பொலன்னறுவை | 447 | 4,470,000.00 | 629 | 6,290,000.00 | 1,226 | 4,978,400.00 | 584 | 11,680,000.00 | 4,146 | 6,222,000.00 | 31 | 155,000.00 | 7,063 | 33,795,400.00 |
| 22 | பதுளை | 673 | 6,730,000.00 | 1,389 | 13,890,000.00 | 3,774 | 15,209,600.00 | 1,819 | 36,380,000.00 | 23,876 | 35,814,000.00 | 224 | 675,500.00 | 31,755 | 108,699,100.00 |
| 23 | மொணராகலை | 629 | 6,290,000.00 | 1,209 | 12,085,000.00 | 2,515 | 10,675,250.00 | 973 | 19,450,000.00 | 12,856 | 19,284,000.00 | 100 | 500,000.00 | 18,282 | 68,284,250.00 |
| 24 | இரத்தினபுரி | 1,124 | 11,240,000.00 | 2,014 | 20,140,000.00 | 5,434 | 23,170,000.00 | 2,889 | 57,780,000.00 | 18,533 | 27,799,500.00 | 139 | 695,000.00 | 30,133 | 140,824,500.00 |
| 25 | கேகாலை | 325 | 3,250,000.00 | 944 | 9,440,000.00 | 3,497 | 14,884,550.00 | 2,086 | 41,735,000.00 | 13,470 | 20,205,000.00 | 49 | 245,000.00 | 20,371 | 89,759,550.00 |
| | மொத்தம் | 15,542 | 155,405,000.00 | 31,097 | 310,962,500.00 | 74,992 | 297,075,200.00 | 38,415 | 768,205,000.00 | 314,039 | 471,217,000.00 | 1,828 | 9,195,500.00 | 475,913 | 2,012,060,200.00 |

### 2.1.3 நுண்நிதி வேலைத்திட்டங்கள்

#### 2.1.3.1 அறிமுகம்

1995ம் ஆண்டின் 30 இலக்க இலங்கை சமுர்த்தி சபை சட்டத்தின் பிரகாரம் சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் 1996 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன் குறைந்த வருமானம் பெறுபவர்களின் சேமிப்பினை அதிகரித்து, அதனூடாக முதலீட்டுப் பலத்தினை அதிகரிப்பதற்கும் உற்பத்தி மற்றும் சேவைகளின் விருத்திக்கு தேவையான மூலதனத் (கடன் வசதிகள்) தினை வழங்குவதற்கும் அதனூடாக அவர்களை கடன் சுமையிலிருந்து மீட்டெடுத்து இலாபகரமான நிறுவன முறையொன்றினை உருவாக்கும் நோக்கில் தலைமைக் காரியாலத்தின் குறுநிதிப் பிரிவு பிரதேச மட்டத்திலுள்ள 331 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்கள், மற்றும் பிரிவு மட்டத்தில் 1,074 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் என் செயற்படுகின்றன.

#### 2.1.3.2 நோக்கங்கள்

1. வங்கி வலையமைப்பின் பொருட்டு புதிய கடன் திட்டங்களை அறிமுகப்படுத்துவம். அதற்குத் தேயைவான சுற்றறிக்கைகள், மற்றும் நெறிப்படுத்தல் கட்டளைகளை வெளியிடுதல்.
2. பிற நெறிப்படுத்தல் நடவடிக்கைகளின் பொருட்டு தேவையான வழிகாட்டல்கள், ஆலோசனைகளை வெளியிடுதல்.
3. வைப்புக்கள் மேம்பாட்டு வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்துதல், மற்றும் அதற்குத் தேவையான வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்.
4. வங்கி நிதியங்களில் முடுலீடு செய்தல், மற்றும் பிரதேச மட்டத்தில் ஆலோசனைகளை வழங்குதல்.
5. நுண்நிதிக் காப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
6. சகல வங்கிகளிலும் தேசிய மட்டத்தில் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளல், மற்றும் அது தொடர்பிலான ஆலோசணைகளை வழங்குதல்.
7. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி, மற்றும் வங்கிச் சங்கங்களின் இறுதிக் கணக்குகளின் பொருட்டு வழங்கப்படும் கணக்காய்வு அறிக்கைக்கமைய இறுதிக் கணக்குகளை உறுதிப்படுத்துதல் மற்றும் இலாப ஒதுக்கங்களுக்கு கட்டளைகளை வழங்குதல்.
8. வங்கிகளுக்கு மீள் நிதியீட்டல் கடன் வசதிகளை வழங்குதல், மற்றும் கடன் பகுப்பாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
9. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களுக்கு காணியினை சுவீகரித்துக் கொள்வதும் / கொள்வனவு செய்வதும் கட்டிடங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளின் நிதியங்களை வழங்குதல் மற்றும் சொத்துக்களை முகாமைத்துவமும்.
10. சமுர்த்தி சமுதாய அடிப்படை முகாமைத்துவ சபையினைக் கூட்டுதல், முகாமைத்துவ பத்திரங்களை சமர்ப்பித்தல், மற்றும் அக்கட்டளைகளை நடைமுறைப்படுத்தல்.
11. சகல சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களின் கடன் ஊடாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்களின் ஒருங்கிணைப்புக்களை மேற்கொள்ளல்.
12. சமுர்த்தி பயனாளிகள், சமுதாய அடிப்படை வங்கி சங்கங்கள் ஊடாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்களின் ஒருங்கிணைப்புக்களை மேற்கொள்ளல்.
13. வாழ்வாதார மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவுகளில் செய்யப்படுகின்ற வேலைத்திட்டங்களின் பொருட்டு சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களின் படைப்பாக்க பங்களிப்பினை வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்தல்.

#### 2.1.3.3 வங்கி அங்கத்துவமும் பங்கு மூலதன முன்னேற்றமும்

சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் குறைந்த வருமான பெறும் ரூபா 500/- இற்கான பங்கு ஒன்றினை கொள்வனவு செய்வதன் மூலம் அவர்களுக்கு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளின் உறுப்புரிமை கிடைக்கப்பெறுகின்றது. அதனூடாக அவர்களை வங்கியின் பங்குதாதரர்களாக மாறுகின்றனர்.

**புள்ளிவிபர அட்டவணை (V)**

**சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி அங்கத்துவ முன்னேற்றம் -(2010-2021)**

| ஆண்டு | பெண்கள் | ஆண்கள் | மொத்தம் | கடந்த வருடத்துன் ஒப்பிடும்போது முன்னேற்றம் | வளர்ச்சி வீதம் |
|---|---|---|---|---|---|
| 2010 | 1,830,840 | 970,693 | 2,801,533 | 213,475 | 8 |
| 2011 | 1,881,808 | 987,740 | 2,869,548 | 68,015 | 2 |
| 2012 | 2,079,173 | 1,078,546 | 3,157,719 | 288,171 | 9 |
| 2013 | 2,199,135 | 1,121,833 | 3,320,968 | 163,249 | 5 |
| 2014 | 2,389,133 | 1,214,461 | 3,603,594 | 282,626 | 8 |
| 2015 | 2,503,840 | 1,253,016 | 3,756,856 | 153,262 | 4 |
| 2016 | 2,543,403 | 1,248,042 | 3,791,445 | 34,589 | 1 |
| 2017 | 2,624,784 | 1,266,833 | 3,891,617 | 100,172 | 3 |
| 2018 | 2,680,394 | 1,276,500 | 3,956,894 | 65,277 | 2 |
| 2019 | 2,913,912 | 1,399,106 | 4,313,018 | 356,124 | 9 |
| 2020 | 2,751,341 | 1,341,176 | 4,092,517 | -220,501 | -5.1 |
| 2021 | 2,791,244 | 1,300,942 | 4,092,186 | -331 | -0.008 |

### 2.1.3.4 வங்கிச் சங்க வைப்புக்கள் வேலைத்திட்டம்

**புள்ளிவிபர அட்டவணை (VI)**

**வைப்புக்கள் (அங்கத்தவர், அங்கத்தவரல்லாதோர், கூட்டு, சிறுவர் மற்றும் திரியமாதா) (2010 – 2021)**

| ஆண்டு | கணக்குகளின் எண்ணிக்கை | கணக்குகளின் எண்ணிக்கையின் வளர்ச்சி | தொகை (ரூ.மில்) | நிதியின் வளர்ச்சி (ரூ.மி) |
|---|---|---|---|---|
| 2010 | 5,505,853 | 337,999 | 15,906.77 | 2,370.12 |
| 2011 | 5,524,025 | 18,172 | 18,907.33 | 3,000.56 |
| 2012 | 6,206,484 | 682,459 | 20799.06 | 1,891.73 |
| 2013 | 6,383,307 | 176,823 | 23,916.57 | 3,117.52 |
| 2014 | 6,822,409 | 439,102 | 29,436.10 | 5,519.53 |
| 2015 | 7,096,317 | 273,908 | 36,528.03 | 7,091.93 |
| 2016 | 7,417,540 | 321,223 | 43,716.00 | 7,187.97 |
| 2017 | 7,800,246 | 382,706 | 49,320.02 | 5,604.02 |
| 2018 | 8,177,216 | 376,970 | 55,627.64 | 6,307.62 |
| 2019 | 8,892,916 | 715700 | 65,498.00 | 9871.00 |
| 2020 | 8,715,703 | (177,213) | 70,338.00 | 4,840.00 |
| 2021 | 8,538,191 | (177,512) | 72,835.00 | 2,497.00 |




**2.1.3.5 சமுதாய அடிப்படை வங்கிக் கடன் வேலைத்திட்டம்.**

- சமுர்த்தி நிவாரணம் பெறுவோர் உட்பட குறைந்த வருமானம் பெறுவோரின் தொழில் முயற்சி ஆற்றல்களை இனங்கண்டு சுயபலத்தினூடாக வறுமை நிலையிலிருந்து மீட்டெடுக்க தேவையான சூழலைக் கட்டியெழுப்ப தேவையான சிறிய நிதியியல்சார் வசதிகளை வழங்குவது வங்கிக் கடன் திட்டத்தின் கீழ் நடைபெறுகின்றது.

- அங்கத்தவர்களின் மூலதன நிதியம் மற்றும் அவசர நிதித் தேவைப்பாடுகளை ஈடுசெய்யும் பொருட்களை விசேட கடன் வேலைத்திட்டங்கள் பல அறிமுகப்படுத்தி செயற்படுத்தப்படுகின்றது.

- வருமானமீட்டல் கருத்திட்டங்களின் பொருட்டு ரூபா 5000/- த்திலிருந்து ரூபா 1000,000/= வரையில் பல்வேறு கடன் திட்டங்களின் கீழ் சமுர்த்தி வங்கிகள் ஊடாக கடன் வழங்குகின்றது அதன் பிரகாரம் வாழ்வாதார அபிவிருத்தி பயிர்ச்செய்கை, தொழில் பயிற்சி போன்ற துறைகளின் பொருட்டான அவசர கடன் தேவைக்களுக்காகவும் கடன் வழங்கப்படுகின்றது.

- வீடமைப்பு, நுகர்வு இடர் போன்ற தேவைப்பாடுகளுக்கும் வங்கிக் கடன் வசதிகள் செயற்படுத்தப்படுகின்றது, இதற்காக ரூபா 5000/= த்திலிருந்து ரூபா 500,000/- வரையிலான கடன்கள் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி சங்கத்தின் மூலம் 'இசுரு கடன்' திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றது.

- சமுர்த்தி வங்கிக்கடன் வேலைத்திட்டத்தின் மூலம் வெற்றிகரமான தொழில்முயற்சியாளர்களின் மூலதன நிதித் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யப்படும் பொருட்டு ரூபா 500000/= முதல் 2000,000/= வரையிலான கடனை சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் மூலம் "இதர" மற்றும் புதிய சமுர்த்தி தொழில் முயற்சிக் கடன் திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்படுகின்றது.

- அவசர நிதித்தேவைப்பாடுகளின் போது அநியாய வட்டிக்காரர்களிடமிருந்து மிக இலகுவில் நிதித் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள நுகர்வு இடர், சுவசக்தி சமுத்தி அருணலு மற்றும் சமுர்த்தி மித்துர கடன் திட்டத்தினூடாக அங்கத்தவர்களுக்கு நிவாரணம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

- 2021ம் ஆண்டின் இறுதியில் 11,669,343 அங்கத்தவர்களுக்கு ரூபா மில்லியன் 394,546.41 இற்கான தொகை சமுர்த்தி வங்கிகள் ஊடாக இது வரையில் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**புள்ளிவிபர அட்டவணை (VII)**
**கடன் வழங்கள் (2010 - 2021)**

| ஆண்டு | எண்ணிக்கை (திரட்டியது) | திரட்டிய விடுவித்த கடன் (ரூ.மில்) | ஆண்டிற்குள் கடன் வழங்கள் (ரூ.மில்) |
|---|---|---|---|
| 2010 | 4,160,596 | 58,531.61 | 10,178.88 |
| 2011 | 4,682,822 | 71,721.04 | 13,189.43 |
| 2012 | 5,085,275 | 87,046.00 | 15,324.96 |
| 2013 | 5,360,115 | 98,056.00 | 11,010.00 |
| 2014 | 6,388,489 | 127,805.40 | 29,749.40 |
| 2015 | 6,851,459 | 153,989.65 | 26,184.25 |
| 2016 | 7,536,257 | 180,229.25 | 26,239.60 |
| 2017 | 8,202,461 | 220,873.20 | 40,643.95 |
| 2018 | 8,868,512 | 264,519.13 | 43,645.93 |
| 2019 | 9,562,062 | 317,915.26 | 53,396.13 |
| 2020 | 11,790,396 | 357,496.70 | 39,581.44 |
| 2021 | 11,669,343 | 394,546.41 | 37,049.71 |



**புள்ளிவிபர அட்டவணை_(VIII)**

**கடன் வகைப்படுத்துதல் 2021.12.31 ம் திகதியல் திரட்டியதாக விடுவிக்கப்பட்டவை**

| **கடன் வகை** | **தொகை (ரூ.மில்)** |
| --- | ---: |
| பயிர்ச் செய்கை | 23,288.30 |
| நுகர்வு | 15,500.53 |
| சுவசக்தி | 10,227.36 |
| இடர் | 1,855.01 |
| வாழ்வாதார சுழற்சி | 9,884.03 |
| வாழ்வாதார அபிவிருத்தி | 123,047.53 |
| வீடமைப்பு உட்கடடமைப்பு வசதிகள் அபிவிருத்தி | 52,480.00 |
| அவசர வர்த்தக கடன் | 1,516.45 |
| வாழ்வின் எழுச்சி அருணலு | 2,965.45 |
| ரண் பிரதீப | 11.68 |
| ஊழியர் நுகர்வுக் கடன் | 1,144.58 |
| சஹன பியவர | 5,285.01 |
| சமுர்த்தி அபிமானி | 680.15 |
| பண்டிகை முற்பணக் கடன் | 632.37 |
| **மொத்தம்** | **248,518.45** |



**2.1.3.6 சமுதாய அடிப்படை வங்கி மிகையான நிதிய முதலிடுகள் (நிலையான வைப்பக்கள் மற்றும் திறைசேறி உண்டியல்கள்)**

வங்கிகளின் சொத்துக்களிலிருந்து உச்சபட்ச நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் கடன் விண்ணப்பதாரிகளுக்கு கடனை விடுவித்ததன் பின்னர் மிகையான நிதியங்களை சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்கள் ஊடாக மாத்திரம் முதலீடுகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சமுதாய அடிப்படை வங்கிகளை மீள் நிதியீட்டல் ரீதியாக பலப்படுத்துவதும் நோக்கமாகவுள்ளது.

**புள்ளிவிபர அட்டவணை((IX).**

**சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு வங்கிகளின் மிகையான நிதியினை முதலீடு செய்தல்.**

**(2010 – 2020)**

| ஆண்டு | தொகை (ரூ.மில்) | வளர்ச்சி (ரூ.மில்) | வளர்ச்சி வீதம் (%) |
|---|---|---|---|
| 2010 | 27,248 | 3,209 | 13% |
| 2011 | 39,048 | 11,800 | 43% |
| 2012 | 42,098 | 3,050 | 8% |
| 2013 | 55,690 | 13,592 | 32% |
| 2014 | 48,309 | -7,381 | (13)% |
| 2015 | 55,906 | 7,597 | 16% |
| 2016 | 68,692 | 12,786 | 23% |
| 2017 | 77,978 | 9,286 | 13% |
| 2018 | 85,942 | 7,964 | 10% |
| 2019 | 95173 | 9231 | 10% |
| 2020 | 89,314 | (5859) | 6.2% |
| 2021 | 108,233 | 18,919 | 21.18% |




**2.1.3.7 நுண்நிதிப் பிரிவின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் மேம்பாட்டு வேலைத்திட்டங்கள்**

2000ம் ஆண்டிலிருந்து சுயநிதி அலகொன்றாக பிரிவில் ஈட்டிக்கொள்ளப்பட்ட வட்டி வருமானங்களிலிருந்து பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி வலையமைப்பினூடாக நாளாந்த வருமானம் பெறுவதனை இலக்காகக் கொண்டு மேற்கொள்வது நுண்நிதிப் பிரிவின் முக்கியநோக்கமாகும். இதற்காக பிரிவில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் கீழுள்ள்வாறாகும்

- **புத்தாண்டு சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டங்கள்.**

வங்கிகளில் இணைந்துள்ள கணக்குடையோரும் ஏனைய மக்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் தமிழ் சிங்கள புத்தாண்டு வைபவத்துடன் இணைந்ததாக சமுர்த்தி வங்கிகள் ஊடாக சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் புத்தாண்டு விழாவிற்கு கிராமிய விளையாட்டுக்களுக்க முதலிடம் வழங்கி 1074 சமுர்த்தி வங்கிகள் முழுவதும் ஒரே நாளில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி, சமுர்த்தி வங்கி பெயர் மற்றும் சேவைகள் தொடர்பில் மக்களுக்கு செய்தியொன்றினை எடுத்துச் செல்ல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அக் காலத்திற்குள் வைப்பிலிடப்பட்ட நிதியின் பொருட்டு வாடிக்கையாளர்களுக்கு பயனுள்ளதும் பெறுமதிவாய்ந்ததுமான உயர்ந்த வகை பரிசீல்களும் வழங்கப்படடன. இதனூடாக குறித்த வலயத்திற்குள் மக்கள் கூட்டுச்சேர்வதனூடாக மக்களின் கலாசார ரீதியான உணர்வுகளையும் மேம்படுத்தவும் அதனை வாய்ப்பாக ஆக்கிக் கொள்ள முடியுமாக இருந்தது. சமுர்த்தி வங்கிகளின் நடவடிக்கைகளில் நம்பிக்கை உறுதிப்படுத்தப்பட்டு, குறைந்த வருமானம் பெறுவோர் உட்பட எமது மக்களிடம் சமுர்த்தி வங்கியின் பெயரை பிரபல்யப்படுத்தி சமூக பொருளாதார ரீதியாக வலுவூட்ட எதிரப்பார்க்கப்படுகின்றது.

- **ரன் பிரதீப தங்க நகை அடகுச்சேவை**

சமுர்த்தி வங்கி அங்கத்தவர்களால் அவசர பணத் தேவையின் நிமித்தம் தங்களிடமுள்ள தங்க நகைகளை அடகு வைத்து பணத்தினை பெற்றுக் கொள்ளும் பொது ஏற்படும் சிக்கல்களை தீர்த்து சலுகை வட்டி அடிப்படையில் அவசர பணத்தேவையினை பூர்த்தி செய்து கொள்வதற்கு வதிகளை ஏற்படுத்தி கொடுப்பதாகும். தற்போது இரத்தினபரி ‘மாவட்டத்தில் உள்ள உடவளவ சமுர்த்தி வங்கியில் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் 176 வங்கி அங்கத்தவர்களுக்கு ரூபா மில்லியன் 4.0 இற்கு அண்மிய அடகு முற்பணம் வழங்கப்பட்டு தற்போது 82 வங்கி அங்கத்தவர்கள் அடகுக் கடனை திருப்பிச் செலுத்தியுள்ளனர்.

- **சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி சார்ந்த அருணலு துரிதக் கடன் வேலைத்திட்டம்**

சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் மூலம் அருணலு துரித கடன் வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டமை நாடுபூராகவும் சகல சமுதாய அடிப்படை அமைப்புக்கள் ஊடாக அங்கத்தவர்களுக்காக செயற்படுத்தப்படுகின்றது. சமுதாய அடிப்படை அமைப்பு அங்கத்தவர்களால் அவர்களது அவசர நிதிச் தேவைப்பாடுகளுக்காக முறைசாராத நுண்நிதி நிறுவனங்கள நபர்கள் ஊடாக கூடிய வட்டி மற்றும் பல்வேறு கட்டுப்பாடுகளுக்கமைய பெற்றுக் கொள்ளும் கடன்களின் பொருட்டு மாற்றீடு ஒன்றாக சலுகை மற்றும் குறுகிய கால கடன் தொகையினைப் பெற்றுக் கொள்ள வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

- **பயிற்சி நடவடிக்கைகள்**

1074 சமுதாய அடிப்படை வங்கி வலையமைப்பு மற்றும் 331 சமுதாய அடிப்படை வங்கிச் சங்க வலையமைப்புக்களில் பணியாற்றும் பணியாளர்கள் வங்கி நடவடிக்கைகள், மற்றும் பிற விடயங்களுக்குறியதான பயிற்சி சமுதாய அடிப்படை வங்கி நிதியங்கள் மூலம் திணைக்களத்தின் பயிற்சிப் பிரிவின் ஒருங்கிணைப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் மக்களுக்கு மிகச் சிறந்த பயனுள்ள சேவையொன்றினை தயாரிக்கும் பொருட்டு பணியாளர் குழாமினர்களின் தலைமை மற்றும் சிறந்த ஆளுமையினை மேம்படுத்துவது இப்பிரிவில் பணிப்பொறுப்பாவுள்ளது.

அதன் பிரகாரம் வங்கியின் செயற்பாடுகள் தொடர்பில் விளக்கங்களை வழங்கும் வங்கி நடவடிக்கைகள், மற்றும் கணக்கீடடுச் செயற்பாடுகள் தொடர்பான ஆரம்ப பாடநெறியினை ஒவ்வொரு வங்கி உத்தியோத்தர்களுக்கும் வழங்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக சமுதாய அடிப்படை வங்கி நடவடிக்கைகள் மற்றும் சமுதாய அடிப்படை வங்கிச் சங்க நடவடிக்கைகளின் கணக்கீட்டுச் செயற்பாடுகள் தொடர்பான பயிற்றப்படாத வங்கி / வங்கிச் சங்க பணியாளர்களை பயிற்றுவிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2019 ம் ஆண்டில் 426 உத்தியோகத்தர்களுக்கு வங்கி கணக்கீட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரையில் வருடத்தின் நுண்நிதி சான்றிதழ் பாடநெறியினைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையானது 489 ஆகும்.

2020ம் ஆண்டில் Covid – 19 தொற்று நிலை காரணமாக பயிற்சியினை வழங்குவதில் தடைகள் ஏற்பட்டதுடன் online தொழில் நுட்பத்தின் ஊடாக குறுகிய கால விழிப்பூட்டல்கள் மாத்திரம் மேற்கொள்ப்பட்டது.

- **முகாமைத்துவ தகவல் அலகு**

1074 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளினதும் தகவல்கள் முகாமை செய்யப்படுவது குறுநிதிப் பிரிவின் முகாமைத்துவ தகவல் பிரிவின் மூலமாகும். அதன் பிரகாரம் ஒவ்வொரு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி சங்கம் மாதாந்தம் தனது வங்கி முன்னேற்றத்தினை வழங்கப்பட்டுள்ள படிவங்களின் ஊடாக தகவல் முகாமைத்துவ அலகிற்கு அறிக்கையிட வேண்டியதுடன் அத்தகவல்களை தயாரித்த சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளில் உள்ள நிலைகள் தொடர்பிலான பகுப்பாய்வினை மேற்கொண்டு தகவல்களை மதிப்பீடு செய்யும் முகமாக தேவைப்படும் வீதாசாரங்களை கட்டியெழுப்புதல் மற்றும் அதன் பிரகாரம் சமுர்த்தி சமுதாய அடிப்படைகளை வங்கிச் சங்கங்களை மதிப்பீடு செய்யவும் திட்டமிட்டுள்ளது. மேலும் கணினி தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்திக் கொண்டு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கத்தின் தகவல்களை நுண்நிதிப் பிரிவிற்கு அனுப்பவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளை கணினி மயப்படுத்தும் நடவடிக்கைகளை வெற்றியடைந்ததாக இந்த அலகின் மூலம் மேலும் பயனுறதிவாய்ந்த மற்றும் வினைத்திறன் மிக்க விதத்தில் சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தினை நடாத்திச் செல்லும் நிலையினை பகுப்பாய்வு செய்தல், மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. 2019ம் ஆண்டில் தேசிய மட்டத்தில் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளின் முன்னேற்ற மீளாய்வு வேலைத்திட்டங்கள் 21, மாவட்ட மட்டங்களில் மேற்கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. 2020ம் ஆண்டிற்குள் மாவட்ட மட்டத்தில் முன்னேற்ற மீளாய்வுகளை நடாத்துவது covid 19 தொற்றுநிலை காரணமாக உத்தேசிக்கப்பட்ட மட்டளவில் மேற்கொள்ள முடியாமல் போனது.

மொத்த வங்கி வலையமைப்பினையும் நிலையான நிதி அலகாக ஆக்கும் நோக்கிலும் ஊழியர்களை ஊக்குவிக்கும் எதிர்ப்பார்ப்புடனும் வங்கிக்கான தரப்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்யும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த வேலைத்திட்டமானது ஒவ்வாரு வருடமும் மேம்படுத்தடப்பட்டு நடைமுறைப்படுத்த திட்டமிட்டுளளது.

### 2.1.3.8. 2021ம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட முக்கியமான பெறுபேறுகள்

1. பங்கு நிதி அளவானது ரூபா மில்லியன் 2466.77 ஆல் அதிகரித்துக் கொண்டமை.
2. சமுர்த்தி வங்கிகளில் அங்கத்தவர்களின் எண்ணிக்கையானது 203.808 ஆல் அதிகரித்துக் கொண்டமை.
3. சகல வைப்புக்களின் அளவானது ரூபா மில்லியன் 9871 ஆல் அதிகரித்துக் கொண்டமை.
4. 2020ம் ஆண்டிற்குள் மாத்திரம் ரூபா மில்லியன் 53,396 இற்கான கடன் தொகையினை வழங்கக் கிடைத்தமை.
5. நுண்நிதிப் பிரிவில் ரூ மில்லியன் 2087 இலாபத்தினை பெற்றுக் கொள்ளக் கிடைத்தமை.
6. சமுர்த்தி வங்கிகளில் இலாபகரமான வங்கியின் எண்ணிக்கையானது முன்னைய வருடத்துடன் பார்க்குமிடத்து 520 வங்கிகளிலிருலந்து 1037 வங்கிகள் வரை அதிகரித்துக் கொள்ளக் கிடைத்தமை.
7. சமுர்த்தி வங்கிகளின் இலாபகர நிலையானது ரூபா 6.6 பில்லியன் வரை விரிவுபடுத்திக் கொள்ளக் கிடைத்தமை. (கணக்காய்வுக்குட்பட்டமை)
8. சமுர்த்தி வங்கிச் செயற்பாடுகளை மதிப்பிடு செய்யும் பொருட்டு வங்கி ஹரசர வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த முடிந்தமை.
9. சமுதாய அடிப்படை அமைப்புக்கள் ஊடாக அடிப்படை அமைப்பு அங்கத்தவர்களுக்கு அருணலு திடீர் கடன் முறை அறிமுகப்படுத்துவது.
10. கட்டாய சேமிப்பின் பொருட்டு 6% வட்டியினை வழங்கக் கிடைத்தமை
11. மீள்நிதியீட்டல் கடன் வேலைத்திட்டங்களை மீள ஆரம்பிக்கக் கிடைத்தமை.
12. வங்கி கண்காணிப்பு அலகினை மீள ஆரம்பிக்கக் கிடைத்தமை.
13. சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களின் பதிவுகளை பூர்த்தி செய்தமை
14. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மகா தொழிற் சங்கத்தினை ஆரம்பித்தல்.

2020ம் ஆண்டில் நடைபெற்ற கோவிட் - 19 தொற்றுக்கு மத்தியில் விசேட மேம்பாட்டு வேலைத்திட்டம் ஒன்று வங்கி மட்டத்தில் மேற்கொள்ளப்படாதிருத்தல் செயற்படுத்திக் கொண்டிருந்த வேலைத்திட்டங்களை துரித விதத்தில் தொடர்ச்சியாக நடாத்திச் செல்லல் மாத்திரம் செயற்படுத்தப்பட்டது.

### 2.1.4 வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டம்

#### 2.1.4.1 அறிமுகம்

சமுர்த்திப் பயனாளிக் குடும்பங்கள் தனது மாதாந்த வருமானத்தினை ஈட்டிக் கொள்ளும் பொருட்டு ஈடுபட்டுள்ள வாழ்வாதாரங்களை நன்றாக விருத்தி செய்து கொண்டு வருமானத்தினை உயர்த்தும் பொருட்டு தேவையான நிதிப் பங்களிப்பு அல்லது விழிப்பூட்டல் அல்லது தொழில்நுட்ப சேவைகளை பெற்றுக் கொள்ளத் தேவையான உதவிகளை வழங்குவது சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் வாழ்வாதார அபிவிருத்திப் பிரிவினது முக்கிய குறிக்கோளாக உள்ளது.

இங்கு சமுர்த்திப் பயனாளிகளின் நிதியியல் அல்லது உழைப்புப் பங்களிப்புடன் சமுர்த்திக் குடும்பங்களில் அவர்கள் ஈடுபட்டுள்ள வருமானமீட்டல் பணிகளை சிறந்த விதத்தல் விருத்தி செய்துகொண்டு அக்குடும்பங்களின் சுய முயற்சியால் கூடுதலான வருமானங்களைப் பெறுவோர்களாக ஆக்கி வலுவூட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது இப்பிரிவின் பணிப்பொறுப்பாகவுள்ளது.

அதன் பிரகாரம் Covid -19 தொற்று நிலைக்கு மத்தியிலும் திறைசேரியால் 2021ம் ஆண்டில் இத்திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளின் அளவு காரணமாக வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அமுல்ப்படுத்தும் பொருட்டு ஒதுக்கப்பட்டது ரூ.மில்லியன் 174 இற்கான நிதி ஒதுக்கீட்டளவாகும்.

எவ்வாறு இருந்தும் 2021ம் ஆண்டின் வரவு செலவுதிட்ட பிரேரணைகளுக்கமைய சமுர்த்தி குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் 200,000 ஐ மையமாகக் கொண்ட முழுமையான மனைசார் வதிவிடப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் பொருட்டு ரூ.மில்லியன் 10,000 இற்கான நிதி ஒதுக்கீட்டளவு எமது அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்தமையால் அந்த வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தம் பொறுப்பும் எமது திணைகளத்தின் வாழ்வாதார அபிவிருத்திப் பிரிவுக்கு ஒப்படைப்பதன் ஊடாக பாறியளவினையுடைய பணியினை எமக்கு நிறைவேற்றுக் கூடியதாக இருந்தது.

#### 2.1.4.2 திணைக்கள நிதி ஒதுக்கீட்டின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள்.

**(அ) சமுர்த்திப் பயனாளிகளை வலுவூட்டும் திட்டத்தினை தயாரித்ததன் கீழ் சமுர்த்திப் பயனாளிகளை தொகுதிகளாகத் திரட்டும் ஆய்வுகள் ரூபா. மில் 10.83**

சுபிட்சத்தின் நோக்குகளுக்கமைய நாடுபூராகவும் உள்ள சமுர்த்திப் பயனாளிகள். சுயபலத்துடன் கூடிய வருமானம் பெறுவோராக ஆக்கும் பொருட்டு சமுர்த்தி நிவாரணம் பெறுவோரின் நிகழ்கால நிலையினை இனங்காணும் நோக்கினை முன்னேற்றிச் செல்ல இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இங்கு தன்னார்வத்துடன் வலுவூட்டக் கூடிய பயனாளிகள் வலுவூட்ட முடியாத பயனாளிகள் என வகைப்படுத்தி இனங்காண்பது இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டது

**புள்ளிவிபரக் குறிப்புக்கள் (X)**

| ஒதுக்கீடு செய்த தொகை (ரூ.மில்) | செலவு (ரூ.மில்) | தன்னார்வத்துடன் வலுவூட்டக்கூடிய பயனாளிகளின் எண்ணிக்கை | வலுவூட்ட முடியாத எண்ணிக்கை | வலுவூட்டக்கூடிய எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 10.83 | 10.03 | 33,989 | 368,460 | 335,451 |

நாட்டில் ஏற்பட்ட கோவிட் நிலைக்கு மத்தியிலும் இவ்வாறு சமுர்த்திப் பயனாளிகளை வகைப்படுத்தி இனங்காணும் நடவடிக்கை தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது.

**(ஆ) 200,000 சமுர்த்திப் பயனாளிகளை வலுவூட்டும் வேலைத்திட்டத்தின் கீழ் தொழில்நுட்பப் பயிற்சிகள் மற்றும் விழிப்பூட்டல் வேலைத்திட்டம் - ரூ.மில் 6.23**

மேலுள்ள பிரகாரம் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் எமது திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சமுர்த்தி / குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் 200,000 ஐ இலக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட வாழ்வாதார வேலைத்திட்டத்திற்குறியதாக கருத்திட்டங்களில் ஈடுபடுத்தப்பட்ட பயனாளிகளின் பொருட்டு தேவையான தொழில்நுட்ப பயிற்சிகள், மற்றும் விழிப்பூட்டல்களின் பொருட்டு தேவையான நிதி ஒதுக்கீடுகள் இந்த வேலைத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட இங்கு இந்த வேலைத்திட்டமானது உதவிச் சேவை நிறுவனங்களுடன் கூட்டிணைந்து நடைமுறைப்படுத்தப்பட்ட தேசிய வேலைத்திட்டம் ஒன்றாக இருந்ததனால் சேதனப் பசளை உற்பத்தி கால்நடைவளர்ப்பு, மலர்ச் செய்கை, தேனீ வளர்ப்பு மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அல்லது வழிப்பூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் முன்னேற்றமானது கீழுள்ள பிரகாரமாகும்

### புள்ளிவிபர அட்டவணை (XI)

| விடயம் | அங்கீகரித்த ஒதுக்கீட்டளவு (ரூ.மில்) | செலவு ரூ மில் | பயனாளிகளின் எண்ணிக்கை | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 200,000 குடும்பங்களை மையமாகக் கொண்ட வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப உதவியும் விழிப்பூட்டல்களும் வழங்குதல் | 6.23 | 4.81 | 45,913 | 389 |

**(இ) சௌபாக்கியா தேசிய வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கை அபிவிருத்தி வேலைத்திட்டம்**

உலகலாவிய கோவிட் தொற்று நிலை காரணமாக நடமாட்ட வரையறைகள் விதிக்கப்பட்டமை காரணமாக மக்கள் விடுகளிலேயே தங்கவைக்கப்பட்டமையும் அக்கால எல்லைக்குள் வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கையில் ஈடுபடச் செய்து மரக்கறி மற்றும் பழவகைகளுக்காக செலவாகும் செலவினை குறைப்பதனையும் நோக்கமாகக் கொண்டு 2021/2022 பெரும் காலத்தில் 10 இலட்சம் சமுர்த்திப் பயனாளிக் குடும்பங்களை அபிவிருத்தி செய்ய இந்த வேலைத்திட்டத்தின் மூலம் எதிர்ப்பார்க்கப்பட்டது.

அதன் பிரகாரம் வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு ஒதுக்கிய வரையறைக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டளவில் ரூபா மில்லியன் 52.01 இந்த வேலைத்திட்டத்திற்கு ஒதுக்கியதுடன் விவசாய திணைக்களத்தின் விதைகள் பதனிடல் நிலையத்திலிருந்து அந்தந்த பிரதேச காலநிலை விருத்திக்கு பொருத்தமான மரக்கறி விதை வகைகள், மாவட்ட சமுர்த்தி அலுவலகங்கள் ஊடாக வழங்கி சமுர்த்தி பயனாளி வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கை அபிவிருத்தி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இவ்வாறு பிரதேசத்திற்கு பொருத்தமான 06 வகைகளைக் கொண்ட மரக்கறி விதைகள், சமுர்த்தி வீட்டுத்தோட்டப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டதுடன் சிற்றவரை, பயற்றங்காயட, அவரை, வெண்டிக்காய் தக்காளி மிளகாய், போஞ்சி, முள்ளங்கி மற்றும் கத்தரி விதைகள் இதன் கீழ் பயிரிடப்பட்டது. அதன் முன்னேற்றம் கீழுள்ளவாறாகும்.

### புள்ளிவிபர அட்டவணை (XII)

| விடயம் | அங்கீகரித்த நிதி ஒதுக்கீட்டளவு | செலவு ரூ (மில்) | பகிர்ந்தளிக்கப்பட்ட பைக்கட்டுக்களின் எ்ணிக்கை |
|---|---|---|---|
| சௌபாக்கிய தேசிய வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கை வேலைத்திட்டம் | 52.01 | 51.43 | 757,407 |

**(ஈ) வாழ்வின் எழுச்சி விசேட வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டம்**

சமுர்த்தி பயனாளிகளின் வாழ்வாதார அபிவிருத்திகளை சிறப்பாக விருத்தி செய்து அவர்களை பொருளாதார, ரீதியாக வலுவூட்டும் பொருட்டு ஒதுக்கியுள்ள வரையறைக்குட்பட்ட நிதி ஒதுக்கீடுகளின் கீழ் வாழ்வாதார, விஷேட கருத்திட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது இதன் கீழ் விவசாயம் கால்நடை வளர்ப்பு, மீன்பிடி, கைத்தொழில் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகிய பிரிவுகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட ஒரு பயனாளியின் பொருட்டு உட்சபட்சமாக ரூபா 50,000 இற்குட்பட்டதாக கருத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டதுடன் 40% த்திற்கான மக்கள் பங்களிப்பு ஒன்றுடன் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

புள்ளிவிபர அட்டவணை (XIII)

| கருத்திட்டம் / வேலைத்திட்டம் | **அங்கீகரித்த நிதி ஒதுக்கீட்டளவு (ரூ.மில்)** | **செலவு (ரூ.மில்)** | **பயனாளிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1. விவசாயக் கருத்திட்டம் | 28.72 | 25.52 | 737 |
| 2. கால்நடைவளர்ப்பு கருத்திட்டம் | 10.80 | 15.64 | 320 |
| 3. மீன்பிடி கருத்திட்டம் | 0.70 | 1.34 | 30 |
| 4. கைத்தொழில் கருத்திட்டம் | 39.80 | 37.22 | 817 |
| 5. சந்தைப்படுத்தல் கருத்திட்டம் | 16.60 | 10.32 | 310 |
| 6. விஷேட விழிப்பூட்டல் மற்றும் பய்றிசி வேலைத்திட்டங்கள் | 7.06 | 3.90 | 2,496 |
| **மொத்தம்** | **103.68** | **93.94** | **4,710** |

**(உ) திணைக்கள நிதி ஒதுக்கீட்டின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களின் மொத்த முன்னேற்றம்**

புள்ளிவிபர அட்டவணை (XIV)

| கருத்திட்டம் / வேலைத்திட்டம் | ஒதுக்கீடு செய்த ஒதுக்கீட்டளவு (ரூ) | செலவு (ரூ மில்) | பௌதீக முன்னேற்றம் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1.சமுர்த்திப் பயனாளிகளை வலுவூட்டுவதன் கீழ் சமுர்த்தி பயனாளிகளை வகைப்படுத்துதல் | 10.83 | 10.**03** | வேலைத்திட்டம் 01 | 714,900 |
| 2. 200000 சமுர்த்திப் பயனாளிகளை வலுவூட்டுவதன் கீழ் விழிப்பூட்டுவதும் தொழில்நுட்ப பயிற்சியினை வழங்குவதும் | 6.23 | 4.81 | வேலைத்திட்டம 1,017 | 45,913 |
| **3.**சௌபாக்கியா தேசிய வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை அபிவிருத்தி வேலைத்திட்டம் | 52.01 | 51.43 | வேலைத்திட்டம் 757,407 | 757,405 |
| **4.**வாழ்வின் எழுச்சி விஷேட வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டம் | 103.68 | 93.94 | 2,219 | 4,710 |
| நிர்வாகச் செலவு | 1.25 | 0.64 | 0 | 0 |
| **மொத்தம்** | **174.00** | **160.85** | **2,222** | **1,522,928** |

### 2.1.4.3 அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் செயற்படுத்தப்படும் வேலைத்திடடங்கள்

**(அ) சமுர்த்திப் பயனாளிகள் / குறைந்த வருமானம் பெறும் 200,000 மையமாகக் கொண்ட பூரணத்துமமான வதிவிடங்கள் மாவட்ட பொருளாதாரத்தினை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம்**

நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கில் பயனுறுதிவாய்ந்த ஒரு பிரஜை, மகிழ்ச்சியுடன் வாழும் ஒரு குடும்பம் என்ற முக்கிய எண்ணக் கருவினை மெய்யாக்கி கிராமியப் பொருளாதாரத்தினை கட்டியழெுப்பி, கிராமிய அபிவிருத்தி, மற்றும் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தவதனை நோக்கமாகக் கொண்டு இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.


# 2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

| | | உண்மை |
|---|---|---|
| | | திருத்தப்பட்ட |
| | **2021** | **2020** |
| | **ரூபா** | **ரூபா** |
| <u>**தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்**</u> | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 849,936,347 | 741,844,910 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 78,714,274,286 | 83,191,806,000 |
| முற்பணங்களை அறவிடல் | 216,687,068 | 48,124,268 |
| வைப்புக்களின் பெறுகை | 12,989,691,125 | 39,120,393,893 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **92,770,588,825** | **123,102,169,071** |
| <u>**கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு**</u> | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள் | 15,841,482,225 | 14,708,432,237 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 63,081,203,584 | 64,260,119,151 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 85,517,520 | 5,000,281,664 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 316,134,657 | 380,538 |
| முற்பணக் கொடுப்பனவு | 215,931,357 | 43,407,148 |
| வைப்புக் கொடுப்பனவு | 12,714,847,116 | 38,966,919,946 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **92,255,116,458** | **122,979,540,684** |
| **தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **515,472,367** | **122,628,387** |

| | | |
|---|---|---|
| <u>**முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்**</u> | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பொளதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | **-** | **-** |
| <u>**கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:**</u> | | |
| கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | 515,472,367 | 122,628,387 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **515,472,367** | **122,628,387** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(515,472,367)** | **(122,628,387)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)** | **(0)** | **0** |
| <u>**நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்**</u> | | |
| உள்ளுர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | **-** | **-** |
| <u>***கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:***</u> | | |
| உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | **-** | **-** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | **-** | **-** |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)** | **(0)** | **0** |
| **ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | **-** | **-** |
| **டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | **-** | **-** |

## 3.5 நிதிக்கூற்று குறிப்புக்கள்

## 3.6 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றுகை

| | | வருமான மதிப்பீடு | | சேகரித்த வருமானம் | |
|---|---|---|---|---|---|
| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டின் விபரம் | ஆரம்ப மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | அளவு | இறுதி வருமான மதிப்பீட்டின் % மாக |
| | உரித்துடையது அல்ல | | | | |

## 3.7 ஒதுக்கிய நிதி ஒதுக்கீட்டினை பயன்படுத்திக்கொள்ளும் செயலாற்றுகை

| நிதி ஒதுக்கீடு | ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு | | சரியான செலவு (ரூ.மி) | பயன்படுத்திய ஒதுக்கீடுகள் முடிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டளவின் % மாக |
|---|---|---|---|---|
| | ஆரம்ப நிதி ஒதுக்கீடு (ரூ.மி) | இறுதி நிதி ஒதுக்கீடு (ரூ.மி) | | |
| மீண்டெழும் | 82,607,170 | 82,607,170 | 78,925,6230 | 96 |
| மூலதன | 612,900 | 612,900 | 515,472 | 84 |

## 3.8. நி.பி. 208 அமைய பிற அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் பிரதிநிதிகளாக இத்திணைக்களத்தில்/ மாவட்டச் செயலகத்தில்/ மாகாண சபையில் வழங்கிய நிதி ஒதுக்கீடு.

| தொ. இல | ஒதுக்கீடு கிடைத்த அமைச்சு / திணைக்களம் | நிதி ஒதுக்கீட்டின் நோக்கம் | நிதி ஒதுக்கீடு | | உண்மைச் செலவு ரூ.மி | பயன்படுத்திய ஒதுக்கீடுகள் முடிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டளவின் % மாக |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்ப நிதி ஒதுக்கீடு (ரூ.மி) | இறுதி நிதி ஒதுக்கீடு (ரூ.மி) | | |
| 01 | பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | பட்டதாரி பயிலுனர்களின் கொடுப்பனவுகளை செலுத்துதல் | 0.16 | 0.16 | 0.13 | 81 |
| 02 | தேசிய பாதிட்டுத் திணைக்களம் | கர்ப்பணி தாய் மார்களுக்கான போசனை நிவாரணக் கொடுப்பனவு- உள உலக வேலைத்திட்டம் | 15,460 | 15,460 | 15,170 | 98 |
| 03 | ஓய்வூதியத் திணைக்களம் | மரணித்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பணிக்கொடையினை தீர்த்தல் | 28,067 | 28,067 | 28,067 | 100 |
| 04 | பல்பணி அபிவிருத்தித் திணைக்களம் | மாத்தறை பயிற்சி நிலைய மின்சார செலவினை மேற்கொள்ளல் | 0.03 | 0.03 | 0.03 | 100 |
| 05 | சமுர்த்தி மனைப்பொருளாதாரம், நுண்நிதி,சுய தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு | 02 இலட்சக் குடும்பங்களைவ லுவூட்டுதல். | 49,582 | 49,582 | 42,117 | 85 |

## 3.9 நிதியல்லாத சொத்துக்களை அறிக்கையிடும் செயலாற்றுகை

| சொத்துக் குறியீடு | குறியீட்டு விபரம் | 31.12.2021 இல் சொத்துக் கணக்கெடுப்பு அறிக்கைக்கமைய மீதி | 31.12.2021இல் சொத்து நிதியியல் தர அறிக்கைக்கேற்ப மீதி | எதிர்காலத்தில் கணக்கீட்டியலிற்குடவுள்ள | முன்னேற்றத்தினை % மாக அறிக்கையிடல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடங்களும் கட்டமைப்பும் | 368,610 | 368,610 | - | 100 |
| 9152 | இயந்திர உபகரணங்கள் | 845,286 | 845,286 | - | 100 |
| 9153 | காணி | 233,033 | 233,033 | 23,336 | 100 |
| 9154 | தேவையான சொத்துக்கள் | - | - | - | - |
| 9155 | உயிரியல்கள் சொத்துக்கள் | - | - | - | - |
| 9160 | தொடர் வேலை | - | - | - | - |
| 9180 | வாடகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் | - | - | - | - |

## 3.10 கணக்காய்வுத் தலைமையதிபதியின் அறிக்கை

LSW/A/SDD/27/21/FS 2022 ஜூன் திகதி

கணக்கீட்டு உத்தியோகத்தர்
சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

**சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை**

---

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும் இந்த நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் அமைப்பின் 154(6) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை எதிர்காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்புக்கள், கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில்

குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுபாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றினை தயாரித்து பேணிச் செல்வதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அடிப்படை ஒன்றினை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உட்பட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் உள்ளடக்கப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்களின் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளார்.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்று முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி செயலாற்றுகை கூற்றில் திறைசேரி கட்டுநிதி மீதி ரூபா 78,714,274,286 தொகை எனினும், திறைசேரி பரீட்சை மீதியின் படி அது ரூபா 78,714,283,000 தொகையாக காணப்பட்டது.

(ஆ) 2021 திசெம்பர் 31 திகதி திறைசேரிக்கு அனுப்பப்பட்ட ரூபா 116,134,657 தொகை நிதி செயலாற்றுகை கூற்றில் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கட்டுநிதி மீதி என காட்டப்பட்டிருந்தது.

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

#### 1.6.2.1 நிதி அல்லாத சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் ACA-6 படிவத்தில் காட்டப்பட்டிருந்த உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களின் பெறுமதி ரூபா 3,751,000 தொகை மற்றும் சுற்றுலா விடுகளின் பெறுமதி ரூபா 17,900,000 இற்கான மீதிகள் 2021 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு முன்கொண்டு வந்தபோது வீடுகள் அல்லாத அலுவலகக் கட்டிடங்களின் பெறுமதி ஆகிய ரூபா 319,764,000 இற்கான மீதியுடன் கூட்டப்பட்டு காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 70,000 தொகை பெறுமதியான தொலைக்காட்சி இயந்திரம் மற்றும் ரூபா 930,000 பெறுமதியான புகைப்படக் கருவி மற்றும் துணைக் கருவிகள் ஆகிய சொத்துக்கள் கூற்றில் நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் உட்படுத்தியிருக்கவில்லை.

### 1.6.2.2 வைப்புக் கணக்கு மீதிகள்

மூன்றாம் தரப்பினருக்கு செலுத்துவதற்காக தற்காலிகமாக தடுத்து வைக்கும் வைப்புக் கணக்கில் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2,798,770,935 தொகைக்கான மீதியில் 8 வருடங்கள் முதல் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் பழமையான ரூபா 2,374,500,000 இற்கான வைப்பு மீதியொன்று காணப்பட்டது.

### 1.6.2.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் படி 05 வைப்புக் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 2,841,119,289 தொகை ஆகக் காணப்பட்டதுடன், அட்டவணைகளின் படி அவை ரூபா 2,818,748,994 தொகையாக இருந்தமையால் ரூபா 22,370,295 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

### 1.6.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பொது வைப்புக் கணக்கு இலக்கம் 6000-0-0-20-19 செலவுகளை மீளளிப்புச் செய்வதற்காக நிதியம் பெறல் ரூபா 1,098,324 தொகைக்குரிய அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

### 1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் சில பதிவேடுகள் முறைப் பிரகாரம் மற்றும் நாளதுவரையில் பேணப்பட்டு இருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டின் வகை | உரிய நிதிப் பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (அ) | அரச உத்தியோகத்தர்களுக்கான பிணைப் பதிவேடு | அ.உ. பிணை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 612(4) | பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நட்டங்கள் சேதங்கள் பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 மற்றும் 104 | நாளதுவரை ஆக்கப்பட்டு இருக்கவில்லை. |
| (இ) | வாகனங்களை அட்டவணைப்படுத்தும் பதிவேடு | நிதிப் பிரமாணம் 1647(உ) | பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2020 இன் 07 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6 ஆவது பிரிவின் படி குறை நிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடுகள் ஒதுக்கும் போது அவை முழுமையாக பயன்படுத்தப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 331-2-2-1-1501 நலன்புரிச் செலவு விடயத்துக்காக 2021 ஜுலை 29 திகதிய பெற்றிருந்த குறை நிரப்புத் தொகை ரூபா 4,500,870,000 தொகையும் ஆரம்ப மதிப்பீட்டுத் தொகை ஆகிய ரூபா 53,000,000,000 தொகையும் உட்பட தேறிய கூட்டுத்தொகை ரூபா 57,500,870,000 தொகையில் இருந்து ரூபா 55,400,092,366 செலவிடப்பட்ட பின்னர் ரூபா 2,100,777,634 தொகை மீதியாக இருந்தது.

(ஆ) 2020 இன் 07 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 5(1) மற்றும் 5(2) உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய நி.பி.66 மற்றும் 69 பிரகாரம் வீரமொங் நடைமுறையை கடைபிடித்து ஏற்பாடுகள் பெற்றுக் கொண்டிருந்த போதிலும் வருட இறுதி அளவில் தொகை செலவிடப்படாதிருந்த 5 சந்தர்ப்பங்கள் தொடர்பாக ரூபா 7,824,698 இற்கான

சேமிப்பு காணப்பட்டதுடன் அது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த காரணங்களை கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(இ) 29 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 5,950,096,700 இற்கான தேறிய ஏற்பாடுகளில் இருந்து ஆண்டிற்கான செலவு ரூபா 4,466,687,414 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 1,483,429,286 தொகை பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

**2.2 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களை அணுகுதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தினால் 9 சந்தர்ப்பங்களில் பெற்றிருந்த, பல்வேறு சேவைகள் மற்றும் வழங்கல்கள் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 183,098 இற்கான பெறுமதி பொறுப்புக்கள் கூற்றில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், பல்வேறு சேவைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த 4 பொறுப்புக்கள் தொடர்பாக ரூபா 344,507 தொகை குறைவாக பொறுப்புக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பொறுப்புக்கள் பதிவேடு மற்றும் நிதிக் கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டிருந்த பொறுப்புக்கள் இடையே இரண்டு செலவு விடயங்கள் தொடர்பாக ரூபா 320,619 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(இ) 2019 திசெம்பர் 03 திகதிய இலக்கம் 271/2019 கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2017 ஏப்ரல் 27 திகதி இலக்கம் 255/2017 கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டிற்குரிய அனைத்துப் பொறுப்புக்களும் தொடர்ந்து வரும் ஆண்டிற்கு எடுத்துச் செல்லாமல் அதே நிதியாண்டிலேயே செலுத்தி விடுவிக்கவேண்டியிருந்ததுடன், பொறுப்புக்கள் ஏதும் தொடர்ந்து வரும் ஆண்டில தீர்க்கும் நோக்கத்துடன், முன்னெடுத்துச் செல்லக்கூடாது எனவும், அந்த அறிவுரைகளுக்கு முரணாக ஏற்படுத்தப்பட்டிருந்த பொறுப்புக்களை தீர்ப்பதற்காக திறைசேரி தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்க மாட்டாது என அறிவுரை வழங்கியிருந்த போதிலும் 08 செலவு விடயங்களின் சேமிப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 99,432,128 தொகையினை மிகைத்து ரூபா 182,849,545 இற்கான பொறுப்புக்களை ஏற்படுத்தியிருந்தது.

**2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்கள்**

2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையானவாறு குறிப்பிட்ட காலப் பகுதியில் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அனுப்புதல் மேற்கொள்ளப்படுகின்றதென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோத்தரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அறிக்கையின் 3.8 பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்கியிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணக்கமின்மை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப் பிரமாணம் 135 மற்றும் 381(i) | பயிற்சி நிலையங்களின் அனைத்து கருமங்களும் நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரக் கையளிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்காமல் இணைக்கப்பட் பதவியணியினரால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 03 பயிற்சி நிலையங்களில் திறைசேரி அங்கீகாரம் இன்றி வங்கி நடைமுறைக் கணக்கு பேணிச் செல்லப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப் பிரமாணம் 189 மற்றும் 486 | 2021 திசெம்பர் மாத வங்கி இணக்கக் கூற்றின் படி 11 மாதங்கள் முதல் 4 வருடங்கள் வரை கால வீச்சில் வைப்புச் செய்யப்பட்ட ஆனால் தேறப்படாத 22 காசோலைக்குரிய கூட்டுத்தொகை ரூபா 2,887,765 தொகை தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்வில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம் 396 | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வழங்கப்பட்டு 06 மாதங்களை கடந்துள்ள கூட்டுத்தொகை ரூபா 164,300 தொகைக்கான 12 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (iv) நிதிப் பிரமாணம் 756,757 மற்றும் 1647(ஆ) மற்றும் 1994 ஆகஸ்ட் 03 திகதிய இலக்கம் 26/92(1) கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | 146 வாகனங்கள் தொடர்பாக பௌதீக மெய்மையாய்தல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) 2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் அறிவுரையின் படி அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக திணைக்களத்தின் அமைப்பு கட்டமைப்பு தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2018 ஜனவரி 24 திகதிய 02/2018 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | சுற்றிக்கையின் பிரகாரம் மனிதவள திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன், ஒட்டுமொத்த பதவியணிக்காகவும் பதவியணி உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2020 ஆகஸ்ட் 18 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 15 | நிதியம் என நிருவப்பட்டுள்ள திவிநெகும நிதியம், சமூக பாதுகாப்பு பொறுப்பு நிதியம், வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியம், வங்கிச் சங்கங்களின் காகிதாகிகள் சுழல்நிதியம் மற்றும் ஊழியர் கடன் சுழல் நிதியம் பேணிச் செல்லும் தேவைப்பாட்டினை கவனத்தில் எடுத்து அவற்றை சட்டபூர்வமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (உ) | நிதி அமைச்சின் 2020 ஒக்தோபர் 02 திகதிய இலக்கம் 05/2020 கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பந்தி 13.2 வழிகாட்டல் இலக்கம் 03 | ஓட்ட நிலையில் காணப்படாத வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு அல்லது திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்தல் தொடர்பாக மற்றும் வழிகாட்டல் ஏற்பாடுகளின் பிரகாரம் அப்புறப்படுத்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அதன்படி நடவடிக்கை எடுக்காத 29 வாகனங்கள் காணப்பட்டன. |

### 2.5 முற்பணங்கள் வழங்குதல் மற்றும் தீர்த்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் BD/AA/LR/01/2022 கொண்ட 2021 திசெம்பர் 31 திகதிய கடிதத்தின் மூலம் முற்பணக் கணக்கின் எல்லைகள் திருத்தத்திற்காக நிதியமைச்சருக்கு பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஏப்ரல் 08 கணக்காய்வுத் திகதி வரை அதற்கான அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) இடமாற்றம், இறப்பு, வேலை இடைநிறுத்தல் மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள ஊழியர்கள் 147 பேரிடம் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருடம் முதல் 05 வருடங்களை மிகைத்துள்ள நிலுவை கடன்மீதி ரூபா 2,188,931 தொகை காணப்பட்டது. இந்தக் கடன் மீதியுள் 05 வருடங்களை மிகைத்துள்ள மீதி ரூபா 657,719 தொகையும் 4 இற்கும் 5 வருடத்திற்கும் இடைப்பட்ட நிலுவை மீதி ரூபா 648,198 தொகையும் 3-4 வருடங்களுக்கு இடைப்பட்ட நிலுவைக் கடன் மீதி ரூபா 407,269 தொகையும் 1-3 வருடங்களுக்கு இடைப்பட்ட நிலுவை மீதி ரூபா 307,780 தொகையுமாக காணப்பட்டது.

(இ) அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த மீதியில் பதுளை மாவட்ட செயலகத்திற்கு ரூபா 34,360 இற்கான செலுத்த வேண்டிய மீதி ஒன்றும் உட்பட்டிருந்ததுடன், அது 2-3 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் ஒன்று கடந்திருந்த போதிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர் 11 பேரிடம் மீளாய்வாண்டிற்கான அறவிடப்பட வேண்டிய இடர் மற்றும் வெள்ள கடன் மீதி ரூபா 672,348 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) சமுர்த்தி அதிகார சபை காணப்பட்ட காலப் பகுதியில் உத்தியோகத்தர்களுக்கு கடன் வழங்கப்பட்ட ஊழியர் கடன் சுழல் நிதியம் தொடர்ச்சியாக பேணிச் செல்லல் தொடர்பாக திறைசேரியின் அறிவுரை பெற்றுக்கொள்ளாமல் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணம் வழங்களின் கீழ் 2020 ஆண்டின் போது 302 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 66,257,360 இற்கான இடர்கடன் வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறு ஊழியர் கடன் சுழல் நிதியத்தின் மூலம் தொடர்ச்சியாக கடன்வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக 2014 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையான 8 வருடங்களுக்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2021 ஆண்டளவில் சுழல் நிதியத்தின் மூலம் கடன் வழங்குதல் நிறுத்தப்பட்டிருந்ததுடன் ஊழியர் கடன் சுழல் நிதியத்தின் 2022 ஆண்டு மார்ச் மாத வங்கி கூற்றின் படி ரூபா 94,216,546 அனுகூலமான மீதியொன்று நடைமுறைக் கணக்கில் காணப்பட்டது.

(ஊ) சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் சார் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வழங்கப்படும் வங்கி நிதிப் பிரிவில் விஷேட ஊழியர் கடன் மற்றும் சமுர்த்தி வங்கிகளின் மூலம் வழங்கப்படும் சமுர்த்தி வங்கி விஷேட கடன், வழங்கப்படும் போது ஏனைய சேவைகளில் இருந்து திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்று வந்துள்ள உத்தியோகத்தர்களுக்காக 4 சந்தர்ப்பங்களில் ரூபா 2,850,836 இற்கான கடன் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்தக் கடன் தொகை திணைக்கள சேவையை விட்டு செல்லும் சந்தர்ப்பத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.6 வைப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) பயிற்சி நிலையங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் அதன் மூலம் செலவுகள் மேற்கொண்ட பின்னர், மீதியாகியுள்ள தொகை ரூபா 2,380,951 தொகை பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) நுண் நிதி வங்கி பிரிவின் மூலம் 2020/2021 ஆண்டுகளின் போது கொவிட் உதவி நிதி வழங்குவதற்காக மாவட்ட சமுர்த்தி அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த தொகையில் மீதியாக திருப்பி அனுப்பப்பட்டிருந்த ரூபா 231,162,935 தொகை அந்தப் பிரிவிற்கு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2019 மே முதல் 2021 ஜூன் வரையான காலப் பகுதியுள் வழங்கப்பட்டிருந்த ஆனால் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காத ரூபா 1,374,632 தொகைக்கான காலவதியாகிய 105 காசோலைகள் நிதிப் பிரமாணம் 396(அ) பிரகாரம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல், பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2020 திசெம்பர் 31 முதல் 2021 ஒக்தோபர் 27 வரையான காலப் பகுதியில் 212 சந்தர்ப்பங்களில் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 112,334,568 தொகை நிதிமூலவளத்தை இனங்காண முடியாமல் பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(உ) ஹம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகத்திற்கு பல்வேறு கருமங்களுக்காக வழங்கியிருந்த பணத்தில் மீதியாகி இருந்து திருப்பி அனுப்பியிருந்த ரூபா 452,688 தொகை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

## 2.7 வங்கிக் கணக்குகள் நெறிப்படுத்துதல்

திசெம்பர் மாத வங்கி இணக்கக் கூற்றில் இணங்காணப்படாத வைப்புக்கள் ரூபா 25,971,852 தொகை மற்றும் தேறப்படாத வைப்புக்கள் ரூபா 85,131,426 தொகை உட்பட

காணப்பட்டதுடன், 2022 பெப்ரவரி மாத அளவில் ரூபா 4,477,765 இற்கான மீதியொன்று 2 மாதங்கள் முதல் 4 வருடங்கள் கடந்திருந்த போதிலும் தேறி இருக்கவில்லை.

### 2.8 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

சமுர்த்தி பயனாளிகளுக்கு செலுத்தப்படுகின்ற உதவி நிதித் தொகையில் ஏதேனும் பங்களிப்பினை பெற்று பல்வேறு குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த நிதியங்கள் மற்றும் கட்டாய சேமிப்பு என தடுத்து வைக்கப்படுகின்ற சமுர்த்தி வங்கிக்கு சொந்தமான நிதியம் திறைசேரி இணக்கத்தின் பேரில் 2004 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை 6 சந்தர்ப்பங்களில் கூட்டுத்தொகை ரூபா 47,653,794,136 தொகை அரசாங்கத்தின் பல்வேறு அலுவல்களுக்காக பெற்றிருந்த போதிலும் இது வரை அந்தத் தொகை உரிய சமுர்த்தி வங்கிக்கு மற்றும் நிதியங்களுக்கு திருப்பி செலுத்தியிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

#### 3.1.1 தூரநோக்கு மற்றும் பணிகள்

வறுமையை ஒழிப்பதை அடிப்படை குறிக்கோளாக கொண்டு குடும்ப அலகினை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தி செயற்திட்டங்களை பயன்படுத்தி வருமானம் மற்றும் சமூக நிலைமையை மேம்படுத்துதல் மூலம் வறுமையை புறக்கணித்தல், இளைஞர் யுவதிகள் நாட்டின் அபிவிருத்திச் செயல்முறைகளுக்கு மற்றும் நிருவாகத்திற்கு நேரடியாக பங்களிப்புச் செய்யும் நோக்கத்துடன் சமுர்த்தி திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2022 ஏப்ரல் மாதம் வரை மொத்த சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கை 1,760,865 தொகையாக காணப்பட்டதுடன், 2013 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை 09 வருட காலப் பகுதியுள் ரூபா 337,645 மில்லியனிற்கான சமுர்த்தி நிவாரண உதவி செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. நீண்டகாலம் முதல் செயற்படுத்தப்பட்டிருந்த சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் இதுவரை பொருளாதார மற்றும் சமூகம் சார் உயர்ந்த வாழ்க்கை நிலைமையை நெருங்கியிருந்த தன்னாற்றலினால் முன்னேறிச் செல்லக்கூடிய வழுவூட்டும் குடும்பங்களை இனங்காணல் முறைப்பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என நடாத்தப்பட்ட தெரிவுப் பரிசோதனையில் பின்வரும் விடயங்களின் படி அவதானிக்கப்பட்டது.

(அ) 1994 முதல் 2011 வரை 17 வருடங்களுக்கான தெரிவுப் பரிசோதனையின் படி சமுர்த்தி பயனாளிகளுக்கு உரித்தான சமுர்த்தி பெறுவோரின் எண்ணிக்கை 593,169 பேர்கள் 2022 ஆண்டு வரை 10 வருடங்களுக்கும் 27 ற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் உதவிநிதி பெற்றுக்கொண்டிருத்தல்.

(ஆ) 1994 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தில் உயர்ந்த வருமான மட்டத்தை நோக்கி நெருங்கியிருந்த பயனாளிகளை அகற்றி புதிய பயனாளிகளை உட்படுத்துவதற்காக காலத்திற்கு ஏற்ப அவர்கள் பெற்றுக்கொள்ளும் வருமான மட்டத்தை பின் தொடர் நடவடிக்கை முறையான செயல்முறையொன்று காணப்படாமை.

#### 3.1.2 கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமையினால் பீடிக்கப்பட்ட மக்களுக்கு ரூபா 5,000 கொடுப்பனவொன்று செலுத்துதல்

கணக்குப் பிரிவில் இருந்து சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி இரண்டு கட்டங்களில் பயனாளிகள் 4,542,865 தொகைக்காக ரூபா 5,000 இற்கான கொடுப்பனவு செய்யவதற்கு கூட்டுத்தொகை ரூபா 22,302.85 மில்லியன் தொகை செலவு மேற்கொள்ளல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்குப் பிரிவிலிருந்த பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் படி மேற்கூறிய உதவிநிதி செலுத்துவதற்கு தேவையான பணம் பெற்றுக்கொள்ளல் சமுர்த்தி நுண்நிதி

வங்கி நிதியம், சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியம் மற்றும் சமுர்த்தி நிதியம் ஆகிய நிதியங்களுக்கு உரிய மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கியில் காணப்படும் ரூபா 11,352,242,292 தொகை பெறுமதியான 91 நிலையான வைப்புக்களை பிணையாக வைத்து ரூபா 14 பில்லியன் தொகை கடன் பெறப்பட்டிருந்தது. கடனை தீர்ப்பதற்காக குறைநிறப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 7,164,971,000 தொகை வழங்கியிருந்தது. அதன்படி, மேலும் செலுத்த வேண்டிய கடன் தொகை ரூபா 6,835,029,000 தொகையாக காணப்பட்டதுடன், இங்கு அறவீடு செய்யப்படும் வட்டியின் பெறுமதியினை கடன் தொகையை முழுமையாக செலுத்தும் சந்தர்ப்பத்தில் கணிப்பதற்கு இணங்கியிருந்தது.

(ஆ) கடன் வழங்கும் போது செலுத்தும் காலம் 6 மாதங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், பின்னர் 3 மாதங்கள் நீடிக்கப்பட்டிருந்த போதிலும் கடனை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2022 ஒக்தோபர் வரை கால நீடிப்பு செய்யப்பட்டிருந்தது.

(இ) உதவிநிதி செலுத்துவதற்காக மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கியிருந்த தொகையில் ரூபா 236,353,120 இற்கான மீதித் தொகை திருப்பி அனுப்பப்பட்டிருந்த போதிலும், அந்தப் பணம் 2021 திசெம்பர் 31 திகதி வரை பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) இதன்படி, சமுர்த்தித் திணைக்களத்தின் நுண் நிதி வங்கி முறைமையிலிருந்து பெற்றிருந்த தொகையை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தினால் தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்தை விழித்துள்ள 2022 பெப்ரவரி 28 திகதி கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

### 3.1.3 ஆரோக்கிய உணவகம் நிர்மாணித்தல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2021 ஆண்டின் போது 9 புதிய உணவகங்கள் நிர்மாணிப்பதற்காக ரூபா 51,333,146 இற்கான ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 49,154,249 தொகை செலவிடப்பட்டு 9 உணவகங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. 2021 ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த ஆரோக்கிய உணவகங்கள் 2022 மார்ச் மாதம் வரை திறக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை காலப் பகுதியில் 5 பிரதேச செயலகங்களில் ஆரோக்கிய உணவகங்கள் நிர்மாணிப்பதற்காக ரூபா 33,269,239 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் அவற்றின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு திறப்பதற்கு இது வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.1.4 பயனாளிகள் முகாமைத்துவ மொடியூலர் (CRM) செயற்படுத்துதல்

சமுர்த்தி பெறுவோர் 1.76 மில்லியன் தொகைக்காக உதவி நிதி செலுத்தும் செயற்திட்டத்தை செயற்படுத்துதல், பயனாளிகள் முகாமைத்துவ மொடியூலர் (CRM) ஊடாக செயற்படுத்துதல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2021 ஜனவரி மாதம் முதல் மொடியூலர் ஊடாக அறிக்கைகள் பெற்றுக் கொள்ளாமல் மாவட்டச் செயலகங்களில் இருந்து அனுப்பப்படும் உச்சமட்ட அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு உதவிநிதி ஏற்பாடுகள் தயாரிக்கப்பட்டிருந்தன. அதன்படி 2 மாவட்டங்களில் 2 மாதங்கள் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் படி மொடியூலர் மற்றும் உச்சமட்ட அறிக்கை இடையே 924 பயனாளிகளுக்கான வித்தியாசம் காணப்பட்டது.

(ஆ) 2022 மார்ச் 16 கணக்காய்வுத் திகதியாகிய மொடியூலர் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட நாளதுவரை ஆக்கப்பட்ட சமுர்த்தி பெறுவோர் எண்ணிக்கை 1,765,819 தொகையாக காணப்பட்டதுடன் அத் திகதியில் உள்ளவாறு கணக்குப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கையின் படி 2409 சமுர்த்தி பெறுவோருக்கான தேறிய

வித்தியாசம் ஒன்று இரண்டு அறிக்கைகள் இடையே வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த முறைமையின் மூலம் உதவிநிதி பெயர் பட்டியல் மாற்றுவதற்கு அடைவதற்கு மேற்கொள்ளப்படும் அகற்றுதல், புதிதாக சேர்த்தல், பெயர் அல்லது பெறுமதி திருத்தங்கள் வதிவுமாற்றமடைதல் என்பன நாளாந்தம் நாளதுவரை ஆக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ஒவ்வொரு மாதமும் முதலாவது கடமை தினத்தில் உதவிநிதி வங்கிக்கு வழங்குவது தொடர்பாக அறிக்கைகள் மொடியூலர் ஊடாக வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நாளதுவரை ஆக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது மிகைப்பணம் முறையே ரூபா 37,579,986 தொகை மற்றும் ரூபா 680,738,364 தொகை திருப்பி அனுப்பியிருத்தல் மூலம் அவதானிக்கப்பட்டது.

(இ) அனைவருக்கும் மின்சாரம் பெற்றுக்கொள்ளும் செயற்திட்டத்திற்குரிய தரவு முகாமைத்துவம் இந்த மொடியூலர் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மொடியூலர் மூலம் Dashboard இன் படி மற்றும் Count report அறிக்கையின் படி வழங்கப்படும் தகவல்கள் இடையே இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன. மேலும் மின்சார சபையின் தகவல்களின் படி மின் தொடர்புகள் வழங்கியிருந்த வீடுகளின் எண்ணிக்கை 33,202 தொகை எனவும் மொடியூலர் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் படி வீடுகளின் எண்ணிக்கை 12,658 தொகையெனவும் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்திட்டங்கள் தொடர்பான தகவல்கள் CRM மொடியூலர் ஊடாக மேற்கொள்ளப்படுவதுடன் 2 மாவட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் படி செயற்திட்டம் ஆரம்பித்த திகதி அங்கீகாரம், நிர்மாண வேலைகள் மேற்கொள்ளல், பெறுகைகள் அலுவல்களை மேற்கொள்ளல், பூர்த்தி செய்தல் தொடர்பான தகவல்கள் மொடியூலருக்கு உட்படுத்தப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(உ) Covid – 19 உதவி நிதி வழங்குதல் தொடர்பான தகவல்கள் CRM மொடியூலருக்கு உள்ளடக்க வேண்டும் என சுற்றறிக்கையின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதனை உரிய முறையில் நாளதுவரை ஆக்கியிருக்கவில்லை.

3.1.5 2013 இன் 01 ஆம் இலக்கம் கொண்ட திவிநெகும அதிகாரச் சட்டத்தின் 26 ஆம் பந்தியின் படி திவிநெகும சமூக அடிப்படை வங்கிகளின் குறிக்கோள்கள் என திவிநெகும பயணாளிகளுக்கு சேமிக்கும் பழக்கத்தை மேம்படுத்துதல், முதலீட்டு இயலுமையை அதிகரித்தல், பயனாளிகளுக்கு கடன் வசதிகள் வழங்கல் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. சமூர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்கங்கள் 2014-2018 காலப் பகுதியில் நடைபெற்றிருந்த 135 மோசடிகள் தொடர்பாக ரூபா 115,723,619 தொகை தொடர்பாக 2018 மற்றும் 2019 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளின் மூலம் சுட்டிக் காட்டியிருந்ததுடன், வருடாந்தம் அறிவிக்கப்பட்டிருந்த நிதி மோசடிகள் மற்றும் முறைகேடுகள் பொருண்மையான அதிகரிப்பு ஒன்று நடைபெற்றிருந்த போதிலும் இது தொடர்பாக உயர் மட்ட முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டு அவற்றை தடுப்பதற்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. வங்கியின் பணம் மோசடியாக பரிமாறுதல் காரணத்தினால் திவிநெகும பயனாளிகளின் தேவைக்காக பயன்படுத்தக் கூடிய பணம் அதற்காக பயன்படுத்த முடியாமல் இருந்தது. இணைக்கப்பட்டிருந்த பதவியணியினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நிதி மோசடிகள் மற்றும் முறைகேடுகள் அறிவித்தல் பொருண்மையான பெறுமதியினை கொண்டிருந்ததால் திவிநெகும அதிகாரச் சட்டத்தின் படி நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு அவர்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளனர் என கணக்காய்வின் போது கேள்விக்குறியாக உள்ளது.

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சமூர்த்தி எப்எம் இணைய வானொலிக்காக ஒலிபரப்பு நிலைய உபகரணங்கள் மற்றும் கட்டுப்பாட்டறை செலவுக்காக ரூபா 1,127,000 தொகையும் உத்தியோகத்தர்கள் பயிற்சி வழங்குவதற்காக மற்றும் தேவையான தொழில்நுட்ப உதவிக்காக ரூபா 1,200,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், இதுவரை உடன்படிக்கை காலம் முடிவடைந்திருந்தமையால் அந்த நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துதல் இடை நிறுத்தப்பட்டிருந்தது. சமூர்த்தி FM இணைய வானொலி ஏற்படுத்தும் அடிப்படை குறிக்கோளாவது ஏழ்மை தலைமையை குறைக்கும் அபிவிருத்தி கருமங்களுக்காக மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்கள் தொகுதியின் முயற்சிகளுக்கு தோள்கொடுக்கும் ஊடக முறையை ஏற்படுத்தி சமூர்த்தி திட்டத்தினை விரிவான உரையாடலுக்கு உள்ளாக்கி அதனது இலக்குகளை மிகவும் செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வமாக பொதுமக்களிடையே தொடர்பாடல் ஏற்படுத்துதல் எனினும், அவ்வாறு மேற்கொள்வதற்கு இணைய வசதிகள் காணப்படாத, ஸ்மார்ட் கையடக்க தொலைபேசி காணப்படாத மற்றும் ஏனைய குறைந்த வசதிகள் இன்றிய சமூர்த்தி பெறுவோர்கள், குறைந்த வருமானம் உடையவர்களுக்கு இந்த FM இணைய வானொலி சேவையின் மூலம் ஆக்கபூர்வமான மற்றும் செயற்திறனுள்ள சேவையொன்றினை பெற்றுக்கொள்ளும் இயலுமை காணப்படுகின்றதா என்பது கேள்விக்குறியாகும்.

(ஆ) 2020 ஆண்டின் போது ‘‘e’’ பத்திரிகை வெளியிடுவதற்காக 3 வருட காலப் பகுதிக்காக சேவையினை பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் மென்பொருள் கொள்வனவு செய்தல், ‘‘e’’ பத்திரிகை வெளியிடுதல் மற்றும் அடிப்படை பக்கங்கள் தயாரிப்பதற்காக ரூபா 9,403,900 தொகை செலுத்துவதற்கு தனியார் நிறுவனம் ஒன்றுடன் உடன்பட்டிருந்தது. 2022 ஏப்ரல் மாதம் அளவில் குறிப்பிட்ட தனியார் நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்த தகவல்களின் படி ‘‘e’’ பத்திரிகை தரவிரக்கம் செய்யப்பட்டிருந்த எண்ணிக்கை 15,279 தொகை எனப்படும் மொத்த சமூர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கையில் 0.86 சதவீதமாக இருந்தது. மீளாய்வாண்டு இறுதி வரை இதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவு ரூபா 5,358,400 தொகையாகும்.

### 3.3 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமூர்த்தி பெறும் 2 இலட்சம் குடும்பங்களை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய திட்டத்தினை தயாரித்தல் மற்றும் சமூர்த்தி பயனாளிகள் 1,777,086 தொகையினரை தொகுதிவாரிப்படுத்தும் கணிப்பீட்டிற்காக ரூபா 10.83 மில்லியன் தொகை ஏற்பாடுகளில் இருந்து 714,900 குடும்பங்களின் கணிப்பீட்டிற்காக தேவையான குடும்ப தொகுதிப்படுத்துவதற்குரிய படிவங்கள் அச்சிடுவதற்காக ரூபா 10.03 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன்படி, பௌதீக முன்னேற்றம் 40 சதவீத தொகை மற்றும் நிதி முன்னேற்றம் 93 சதவீத தொகையாக இருந்தது.

(ஆ) வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு தேவையான தொழில்நுட்ப உதவியை பெற்றுக்கொள்வதற்காக மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 6.23 மில்லியன் தொகை வழங்கியிருந்த போதிலும், திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அதனது நிதி முன்னேற்றம் ரூபா 4.81 மில்லியன் தொகை எனப்படும் 77 சதவீதமாகும். இந்தத் தொகையில் 91 சதவீதம் உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் நடாத்துவதற்காக செலவிடப்பட்டிருந்ததுடன், பொலன்னறுவை மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் மாத்திரம் 09 பல்வேறு செயற்திட்டங்களுக்காக ரூபா 414,883 தொகை செலவிடப்பட்டு குறிப்பிட்ட பயிற்சி வழங்கல்கள் வழங்கப்பட்டிருந்தன.

(இ) பலங்கொட பயிற்சி நிலையத்தின் உத்தேச உர செயற்களம் நிர்மாணிப்பதற்காக ரூபா 530,000 இற்கான ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் திசெம்பர் 31 திகதி வரை அதனை ஆரம்பித்திருக்கவில்லை.

(ஈ) 2 இலட்சம் சமூர்த்தி குடும்பங்களை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக 1,736 அலுவலகங்களில் பதாதைகள் காட்சிப்படுத்துவதற்காக விஷேட ஜீவனோபாய செயற்திட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் இருந்து ரூபா 3,364,505 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(உ) மனிதவள அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சமூக அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் தொடர்பாக பட்டப்பின் படிப்பு பட்ட பாடநெறிக்காக 25 மாவட்டங்களை சேர்ந்த 50 உத்தியோகத்தர்களுக்கு பாடநெறியை கற்பித்தல் இலக்காக இருந்த போதிலும், 09 மாவட்டங்களை சேர்ந்த 33 உத்தியோகத்தர்கள் மற்றும் தலைமை அலுவலகத்தை சேர்ந்த 6 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 2,340,000 தொகை திசெம்பர் மாதம் பேராதனை பல்கலைகழகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. கொடுப்பனவுப் பதிவேட்டின் படி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 37 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 120,000 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்ததெனவும், பிரதேச ரீதியாக தெரிவு செய்தல் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் எதிர்பார்த்த குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 3.4 எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை

---

சமூக அடிப்படை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 331 பிரதேச செயலகங்களின் சமூர்த்தி சமூக அடிப்படை அமைப்புக்கள் மற்றும் சமூர்த்தி பிரதேச அமைப்புக்கள் 30,842 இன் உட்கட்டமைப்பு வசதிகள் வழங்குவதற்காக ரூபா 19,000,000 இற்கான ஏற்பாட்டுத் தொகையில் சமூர்த்தி சமூக அடிப்படை அமைப்பு மற்றும் சமூர்த்தி பிரதேச அமைப்புக்கள் 2,742 இற்கான அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 13,710,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 3.5 பெறுகைகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 2/2020 இல் 3 மற்றும் 4 பந்திகளில் காட்டப்பட்டுள்ளவாறு மற்றும் 2021 திசெம்பர் 23 திகதிய 7/2020 கொண்ட பாதீட்டு சுட்டறிக்கையின் படி செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறின்றி ஆரோக்கிய உணவகங்கள் நிர்மாணித்தல், திருத்த வேலைகள் உபகரணங்கள் கொள்வனவு செய்தல் அறிவித்தல் பதாதைகள் தயாரித்தல் ஆகியவற்றிற்காக 2021 திசெம்பர் மாதத்தில் ரூபா 10,642,564 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) பெறுகைத் திட்டம் தயாரிக்கும் போது அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1(இ) மற்றும் 4.2.2(அ) பிரகாரம் பெறுகை அலுவல்கள் விரிவாகவும் மற்றும் பெறுகை நேரசூசிக்கு உட்படக்கூடிய விதமாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டு ரூபா 7,371,546 தொகை பெறுமதியான அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யும் போது பெறுகை திட்டத்தில் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை.

(இ) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 1.2.1 அத்தியாயத்தில் பெறுகை செய்முறையின் மூலம் உறுதிப்படுத்த வேண்டிய விடயங்களுக்கு முரணாக மற்றும் பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.5(ஆ), (இ) பந்திகளின் படி நேர் ஒப்பந்த முறைமையின் கீழ் கொள்வனவு அலுவல்கள் சந்தர்ப்பம் சார் விடயங்களுக்கு முரணாக ரூபா 5,864,485 தொகை பெறுமதியான பண்ட உபகரணங்கள் மற்றும் காகிதாகிகள் 2021 ஜூலை 05 திகதிய அமப/21/1118/313/036 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி அரச வாணிப (பலவின) கூட்டுத்தாபனத்தில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.6 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

நிதிப் பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்கப் பணம், வருமானம், முத்திரை மற்றும் பண்டங்களை பெற்றுக்கொள்ளல் அல்லது பொறுப்பாக உள்ள மற்றும் நிருவாகம் சார் பொறுப்பு சொல்ல வேண்டிய மற்றும் அரசாங்க கணக்கிற்கு உரிய பொறுப்பு சாட்டப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைத்தல் மேற்கொண்டிருக்கவில்லை.

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமூர்த்தி திணைக்களத்தின் வாகனப் பதிவேட்டில் 14 மோட்டார் சைக்கள் காணப்பட்டதுடன், இந்த மோட்டார் சைக்கிள்கள் திணைக்களத்தின் சொத்துக்கள் என உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சமூர்த்தித் திணைக்களத்திற்கு சொந்தமான 146 வாகனங்களில் 33 வாகனங்கள் தொழில்நுட்ப கோளாறு காரணமாக நீண்ட காலம் முதல் திணைக்கள வளவில் மற்றும் டென்சில் கொப்பேகடுவ மாவத்தை வாகனத் தரிப்பிடத்தில் பாதுகாப்பற்ற முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. அவற்றில் 14 வாகனங்கள் திருத்த வேலை மேற்கொண்டு ஓட்டுவதற்கு தகுதியான நிலையில் காணப்பட்டதென, 2020 ஒக்தோபர் மாதம் மற்றும் 2021 ஜூலை மாதம் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கைகளின் மூலம் அவதானிக்கப்பட்டிருந்தது. இந்த வாகனங்களின் திருத்த வேலை மேற்கொள்வதற்கு கணக்காய்வுத் திகதியாகிய 2022 ஏப்ரல் 24 திகதி வரை முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக பாதுகாப்பற்ற முறையில் காணப்படும் இந்த வாகனங்களை விரைவாக திருத்த வேலை மேற்கொள்ளப்படாமையால் பயன்படுத்த முடியாத நிலைமைக்கு ஆளாகும், திருத்த வேலை செலவு அதிகரித்தல், வாகனங்களின் உதிரிப் பாகங்கள் காணாமல் போதல் நடைபெறுவதற்கு சந்தரப்பம் காணப்படுகின்றது எனவும், அதனை தவிர்ந்துகொள்ளல் முகாமைத்தின் பொறுப்பு என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### 3.8 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அளிக்காமை

முன்னைய ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த 03 கணக்காய்வு ஐயவினாக்கள் மற்றும் மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த 03 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அனுப்பியிருக்காததுடன், தாமத காலம் 1 மாதம் முதல் 29 மாதங்களை மிகைத்த கால வீச்சில் காணப்பட்டது. அந்த ஐயவினாக்களுடன் தொடர்புடைய கணக்கிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 192,875,829 தொகையாக இருந்தது.

### 3.9 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2019 மே 31 திகதிய DSD/HO/6/EP/2/55/10 இலக்கம் கொண்ட மாவட்ட சமூர்த்தி பணிப்பாளர்களுக்கு அனுப்பப்பட்ட பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் உணவகங்கள் நிர்மாணிக்கும் போது குறிப்பிட்ட காணியை திணைக்களத்திற்கு உரித்தாக்கக் கூடிய காணி ஒன்றாக இருக்க வேண்டும் எனவும், குறைந்த அளவு 20 பர்சஸ் காணியாக இருக்க வேண்டும் எனவும் காட்டப்பட்டிருந்த போதிலும் 2016 முதல் 2021 வரையான காலப்பகுதியுள் 31 ஆரோக்கிய உணவகங்கள் நிர்மாணிப்பதற்காக திணைக்களத்தினால் ரூபா 171,370,352 இற்கான செலவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்தக் காணிகளின் சட்டரீதியான உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2016 முதல் 2021 ஆண்டு வரையான காலப் பகுதியில் ஆரோக்கிய உணவகங்கள் நிறுவுதல், முன்னேற்றல் மற்றும் திருத்த வேலைகளுக்காக திணைக்களத்தினால் இதுவரை ரூபா 171,370,352 தொகை செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதன் மூலம் வருமானம் ஒன்றினையும் பெற்றுக்கொள்வதற்கு மூலோபாயங்களை பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(இ) பணிப்பாளர் நாயகத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ வாகனத்திற்காக 2021 ஜனவரி முதல் செப்தம்பர் வரையான காலத்திற்குரிய ரூபா 323,390 தொகை எரிபொருள் செலவாக திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளாமல் வங்கி நிதிப் பிரிவிலிருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், பயன்படுத்தப்படும் தேக்க வாகனத்திற்கு உரிய ரூபா 173,947 தொகைக்கான எரிபொருள் செலவு திணைக்களத்தினால் செலவிடப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. அதன்படி, பணிப்பாளர் நாயகத்திற்கு இந்தக் காலப்பகுதிக்காக உரித்துடைய 1,530 லீற்றர் எரிபொருள் ஏற்பாடுகளை மிகைத்து ரூபா 255,597 தொகை செலவிடப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(ஈ) நுண்நிதிப் பிரிவிற்கு ஒதுக்கப்பட்டிருந்த வாகனம் அந்தப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் (க.நி) இனால் வீட்டிற்கும் அலுவலகத்திற்கும் இடையே போக்குவரத்திற்காக பயன்படுத்தியிருந்ததுடன், வாகனம் இரவு நேரத்தில் வீட்டில் நிறுத்தப்பட்டிருந்ததெனவும் அந்த உத்தியோகத்தரினாலே வாகனம் ஓட்டப்பட்டிருந்ததெனவும், கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. அதன்படி, வாகனத்தை ஓட்டுவதற்குரிய அதிகாரம் அளித்தல், வீட்டில் நிறுத்தி வைப்பதற்கு அங்கீகாரம் அளித்தல் தொடர்பாக சான்றுகள் மற்றும் உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் வாகனப் பதிவேட்டின் படி திணைக்களத்திற்கு சொந்தமான 146 வாகனங்களுக்குரிய கோவைகள், சம்பவப் பதிவேடு, நட்டங்கள் சேதங்கள் பதிவேடு முறைப்பிரகாரம் பேணப்படாமை மற்றும் வாகனங்களை உரிய முறையில் பராமரிக்காமை மற்றும் வாகனங்கள் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாட்டில் காணப்பட்ட பலவீனங்களின் காரணமாக 2021 நிதிக் கூற்றுக்களின் படி வாகன பராமரிப்பு செலவு மற்றும் செயற்பாட்டு லீஸிங் வாகன வாடகை என கூட்டுத்தொகை ரூபா 36,072,853 தொகை செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3.10 நட்டங்கள் சேதங்கள் தொடர்பான பரிசோதனை**

-----------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016, 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது ஏற்பட்டிருந்த 05 வாகன விபத்துக்கள் தொடர்பாக, விபத்து ஏற்பட்டு 2 ½ வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரை காலம் கடந்த பின்னர் நி.பி. 104(3), 104(4) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) 06 வானங்கள் தொடர்பாக ஏற்பட்டிருந்த விபத்துக்கள் தொடர்பாக சேதங்கள் மற்றும் நட்டங்கள் பதிவேட்டில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) நிதிப் பிரமாணம் 104(3) பிரகாரம் விபத்து ஏற்பட்ட பின்னர் ஆரம்ப அறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 104(4) பிரகாரம் முழுமையான அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தின் 07 வாகனங்கள் தொடர்பாக அந்த அறிக்கை சமர்ப்பித்திருக்கவில்லை என மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஈ) 2016 மே 05 திகதி விபத்துக்குள்ளாகிய வாகனம் தொடர்பாக 2016 ஆகஸ்ட் 10 திகதிய நீதிமன்ற வழக்கு தீர்ப்பின் மூலம் சாரதி குற்றவாளி என

தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த வாகனத்தின் திருத்த வேலைக்காக காப்புறுதி நட்டஈடாக கிடைத்திருந்த ரூபா 564,840 தொகை செலவிடப்பட்டிருந்தது. சேதத்திற்கு பொறுப்பான தரப்பினர் தொடர்பாக பணம் அறவீடு செய்வதற்கு திணைக்களத்தின் முகாமைத்துவத்தினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.11** 2019/41/04 கொண்ட தேசிய சபை தீர்மானத்தின் படி சமுர்த்தி சமூக அடிப்படை அமைப்பு மற்றும் பிரதேச அமைப்பிற்கு பணிப்பாளர் நாயகத்தினால் அதிகாரச் சட்டத்தின் 4(3)(2) பிரிவின் படி சான்றிதழ் ஒன்று வழங்கும் போது மற்றும் வருடாந்தம் புதுப்பிக்கும் போது அறவீடு செய்யும் கட்டணம் சமுர்த்தி தேசிய அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, புதிய சான்றிதழ்களுக்காக ரூபா 500 தொகையும், புதுப்பித்தலுக்காக ரூபா 300 தொகையுமாக அறவீடு செய்யப்பட்ட ரூபா 34,157,800 இற்கான தொகையொன்று 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமுர்த்தி தேசிய சமூக அபிவிருத்தி நிதியத்தில் காணப்பட்டது. 1995 இன் 30 இலக்க இலங்கை சமுர்த்தி அதிகார சபை அதிகார சட்டத்தின் படி மே 31 திகதி நிகழக்கூடிய சர்வதேச புகையிலை எதிர்ப்பு தினத்திற்கு ஒத்த நிகழ்வாக செயற்படுத்தப்படும் கொடி மற்றும் ஸ்டிகர் விற்பனை செய்வதன் மூலம் உழைத்த வருமானம் ரூபா 46,822,495 தொகை இந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இந்த சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றம் தொடர்பாக திறைசேரியின் அறிவுரையை பெற்று அதன் அலுவல்களை முறைப்படுத்துவதற்காக சட்டரீதியாக நிலைமை ஒன்றை ஏற்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் பணம் சேகரித்தல் மற்றும் ரூபா 87,500,000 தொகையொன்று நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 4 நல்லாளுகை

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை உரிய முறையில் மீளாய்வு செய்து குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் தவிர்த்துக்கொள்வதற்காக தேவையான சரியான நடவடிக்கைகள் எடுத்திருக்காமையால் 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 41 பிரிவின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கருமங்கள் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 5. மனிதவள முகாமைத்துவம்

2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி பின்வருமாறாகும்.

| வகைப்படுத்தல் | அங்கீகரிக்கப் பட்ட | உள்ளவாறான பதவியணி | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட | 106 | 66 | 40 | - |
| முன்றாம் தர | 2,501 | 2,388 | 259 | 146 |
| இரண்டாம் தர | 24,952 | 21,757 | 3,942 | 747 |
| ஆரம்ப | 516 | 434 | 90 | 8 |
| | 28,075 | 24,645 | 4,331 | 901 |

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2021 திசெம்பர் 31 திகதி அளவில் அங்கீகரிக்கப்பட்ட பணிப்பாளர் பதவிகள் 11 தொகை, அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் பதவிகள் 20 தொகை மற்றும் மாவாட்ட சமுர்த்தி பணிப்பாளர் பதவிகள் 06 உம் வெற்றிடமாக காணப்பட்டது. இந்த வெற்றிடப் பதவிகளுக்காக கடமையை நிறைவேற்றுதல், பதில் கடமையாற்றல், கடமையை

அணவல் செய்தல் ஆக நியமனங்கள் வழங்குவதற்கு திணைக்களத்தினால் ஆரம்பம் முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும், திணைக்களத்தின் இரண்டாம் தர, முன்றாம் தர மட்டங்களின் பதவிகள் 4,291 தொகை வெற்றிடமாக காணப்பட்டதுடன், அங்கீகரிக்கப்படாத அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் 746 தொகை உள்ளவாறான பதவியணியை சேர்ந்ததாகும்.

(ஆ) தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் படி பொலன்னறுவை மாவட்டத்தில் சமுர்த்தி அலுவலகங்கள், வங்கி மற்றும் வங்கி சங்கங்கள் அலுவலகங்களில் இருக்க வேண்டிய சமுர்த்தி முகாமையாளர்களின் எண்ணிக்கை 54 தொகை எனினும், 2021 ஜூன் 30 திகதியில் உள்ளவாறான எண்ணிக்கை 27 ஆக இருந்தது. சமுர்த்தி முகாமையாளர்கள் 09 பேரினால் 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் நிரந்தர கடமையாற்றும் இடத்திற்கு மேலதிகமாக வெற்றிடமாக காணப்படும் இடங்களில் பதில் கடமையாற்றல் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. மேலும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் 476 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், உள்ளவாறான பதவியணி 410 ஆக இருந்தது.

